# திருவாசக பூசாவிதி

உ

திருச்சிற்றம்பலம்

ஆறுமுக நாவலர்

இயற்றிய

# திருவாசக பூசாவிதி

திருமயிலை

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை

பதிப்பித்தது

சென்னை:

எக்ஸ்பர்ட் அண்டு கம்பெனி

அச்சிட்டது

1946 விலை அணா 3

# பதிப்புரை.

இச்சிறிய நூல் 1907-ம் ஆண்டில் சைவப் பெரியார் சுவாமிநாத பண்டிதர் அவர்களால் முதன் முதல் அச்சிடப்பட்டுச் சிவபூசை செய் வோர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இது

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகமதற்கு வாச்சியந்
தூசகலல் வேய்த் தோளிடத்தவனே.

என்னும் உண்மையைக் கிரியா மூலமாக அறிவிப்பதாகும்.

நாவலரையா எழுதியதும், திருவாசகம் முதலிய பொருள் நடராசப் பெருமானே யென்று விளங்க வைப்பதுமாகிய இச்சிறு நூலைப் பரப்ப வேண்டுமென்னும் பேராசையால் இப்பதிப்பை வெளியிடலாயிற்று. பிரதியுதவிய எனது தமையனர் பண்டிதர் சே. சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு வந்தனமளிக்கின்றேன்.

திருமயிலை,
வியஹு வைகாசி மீ } சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவாசக பூசாவிதி

## க. பூசாரம்பம்

நீராடித் தோய்த்துலர்ந்த வஸ்திரமாயினும் பட்டாயினும் தரித்து, அநுட்டானம் முடித்துப் பூசைப்பாத்திரங்களையும் சந்தனக் கல்லையும் சந்தனக்கட்டையையும் 'ஓம் அஸ்திராயபட்' என்று கழுவி எடுத்துக்கொள்க.

பூசைத்தானத்தைத் திருமெழுக்குக் கொண்டு 'ஓம் அஸ்திராயபட்' என்று தெளித்து, 'ஓம் கவசாய வௌஷட்' என்று தடவிக்கைசமூளி, நடுவிலுங் கிழக்கு முதல் எட்டுத்திக்கிலும் மீட்டும் நடுவிலும் 'ஓம் இருதயாய நம' என்று பத்திரங் கிள்ளி வைக்க.

பூசைத் தானத்தின் நடுவே பீடத்தையும் அதற்குக் கிழக்கே ஒருபத்திரத்தின்மேலே திருமஞ்சன பாத்திரத்தையும், பீடத்துக்குத் தெற்கே ஒருபத்திரத்தின்மேல் அபிஷேக கலசத்தையும், அதற்குமேற்கே ஒருபத்திரத்தின்மேல் வட்டகையையும் வைத்து, அவைகளிலே 'ஓம் இருதயாயநம' என்று பத்திரங் கிள்ளிவைத்து, பீடத்துக்கு மேற்கே பத்திரபுட்பத்தட்டை வைத்துவிட்டுச், சந்தனம் இழைத்து, அதன்மீது பத்திரங் கிள்ளி வைக்க.

## ௮. சிவாசனபூசை.

திருமுறையின் கீழ்ப்பாகத்தில் 'ஓம் சிவாசநாய நம' என்று பூமிமுதற் குடிலை பரியந்தம் வியாபித்ததாகிய சிவாசனத்தைப் பூசித்து,

## ௯. சிவமூர்த்தி நிவேசனம்.

புட்பங்களால் அஞ்சலியை நிறைத்து இருதயத்தானத்தில் வைத்துக்கொண்டு,

## ௰. தியானம்.

ஒருகோடி ரவியொளியு மொருமுக்கண் ணு
மோங்குமிளம் பிறைநதிசேர் சடையு மூன்றுந்
திருமேவு வலப்பதமுந் தூக்குமற்றைத்
திருவடியும் புலியதளி னுடையுஞ் செய்ய
குருமேவு மக்கினிக்கை வீசுசெங்கை
கோதிலப யக்கைதம ருகக்கை நான்கும்
உருகார்வத் திடப்பாலி னுமையுமாக
வொளிருநட ராசனையா முன்னு வாமே.

என்று நடேசமூர்த்தியாகிய சிவமூர்த்தியைத் தியானித்துப் புட்பாஞ்சலியைப் புருவநடுவளவாக உயர்த்திக்கொண்டுபோய், 'ஓம்சிவமூர்த்தயே நம' என்று உச்சரித்து அச்சிவமூர்த்தியைத் தனது அஞ்சலியினுள் வந்ததாக பாவித்து இருதயத்தானமளவாக இறக்கிக் கொண்டுவந்து, திருமுறையின் மேல் நியசிக்க.

## கக. நேத்திர நியாசம்.

ஞானமுங் கிரியையும் இச்சையுமாகிய நேத்திரத்தை நேத்திரங்களிலே நடுவிரல் மூன்றினாலும் நியசிக்க

## கஉ. சிவ ஆவாகனம்.

புட்பங்களால் அஞ்சலியை நிறைத்து, 'ஓம் சிவாய நம' என்று உச்சரித்துப் புட்பாஞ்சலியைத் துவாதசாந்தபரியந்தம் உயர்த்திக் கொண்டு போய் அங்குள்ள சிவபெருமானைத் தியானித்து, புருவநடுவரையும் இறக்கி வலமூக்கினாலே புறப்பட்டு இருதயத்தில் இருத்திய புட்பாஞ்சலியுள் வந்தவராகப் பாவித்து, 'ஓம் இருதயாய நம' என்று ஆவாகனமும், தாபனமும், சந்நிதானமும், சந்நிரோதனமுஞ் செய்து வட்டகையை எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையில் மிருகி முத்திரையினாலே 'ஓம் சிவாய சுவாகா' என்று அர்க்கியங்கொடுக்க.

## கங. இருதயாதி நியாசம்.

இருதயம், சிரசு, சிகை, மூலைநடு, உள்ளங்கை என்னும் ஐந்திடங்களிலும் முறையே 'ஓம் இருதாய நம', 'ஓம் சிரசே நம', 'ஓம் சிகாயை நம', ஓம் கவசாயவௌடு', 'ஓம் அஸ்திராயபடு, என்றுநியசித்து. 'ஓம் சிவாயவௌஷடு' என்று ஐக்கியமும், 'ஓம் அஸ்திராயபடு' என்று இரக்ஷையும். 'ஓம் கவசாயவௌஷடு' என்று அவகுண்டனமும் செய்து 'ஓம் சிவாயவௌஷடு' என்றுமகா முத்திரைகொடுக்க.

## கச. பாத்தியம் ஆசமனம் அர்க்கியம்.

வட்டகையை எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையில் மிருகிமுத்திரையினுலே 'ஓம் சிவாய நம' என்று பாதங்களிலே இரண்டு தரம் பாத்தியமும், 'ஓம் சிவாய சுவதா' என்று முகத்திலே மூன்றுதரம் ஆசமனமும், 'ஓம் சிவாய சுவாகா' என்று சிரசிலே ஒருதரம் அர்க்கியமுங் கொடுக்க.

## கரு. புட்பதானம்.

'ஓம் சிவாயவௌஷடு' என்று புட்பங்களும், அறுகும், அக்ஷதையும் சாத்துக.

## கசு. பாவனுபிஷேகம்,

சிறுவிரல் அணிவிரல்களின் நடுவிலே ஒருபுட்பமெடுத்துக்கொண்டு பெருவிரல் சுட்டுவிரல்களினுலே திருமுறைமேலுள்ள புட்பங்களை 'ஓம் அஸ்திராயபடு' என்று கழித்து 'ஓம் சிவாய நம' என்று புட்பத்தை மேலே சாத்தி, அபிஷேக சலத்தைக் கையிற்கொண்டு எண்ணெய்க்காப்பு முதலிய அபிஷேகத் திரவியங்களை மனசிலே பாவித்து, 'ஓம் சிவாய சுவாகா' என்று புறம்பே பாவனுபிஷேகம் பண்ணி, அர்க்கிய சலத்தினுலே புரோக்ஷிக்க.

## கஎ. சந்தனுதி.

சந்தனமும் அறுகும் அக்ஷதையும் புட்பங்களும் சாத்தி, வஸ்திரம் ஆபரணம் முதலியவை சாத்தியதாகப் பாவித்துப் புட்பஞ்சாத்துக.

## கச. புட்பாஞ்சலித்திரயம்.

'ஓம் ஆத்தும தத்துவாதிபதயே சிவாய நம', 'ஓம் வித்தியா தத்துவாதிபதயே சிவாய நம', 'ஓம் சிவ தத்துவாதிபதயே சிவாய நம' என்று மூன்று தரம் புட்பாஞ்சலி சாத்தி, 'ஓம் சிவாய சுவாகா' என்று அர்க்கியங் கொடுக்க.

## ககூ. நைவேத்தியாதி.

'ஓம் சிவாய சுவாகா' என்று தூபமுந் தீபமுங் காட்டி, 'ஓம் சிவாய சுவதா' என்று மூன்று தரம் ஆசமனமும் 'ஓம் சிவாய சுவாகா, என்று ஒரு தரம் அர்க்கியமுங் கொடுத்து, நைவேத்தியத்தை 'ஓம் அஸ்திராயபடு' என்று அர்க்கிய சலத்தினாலே புரோக்ஷித்து, நிரீக்ஷணம் புரோக்ஷணம் தாடனம் அப்பியுக்ஷணம் என்னும் நான்கும் செய்து சுத்தமாக்கிப் புட்பத்தோடு கூடிய மிருகி முத்திரையினால் 'ஓம் சிவாய நைவேத்தியம் சுவாகா' என்று நிவேதித்து, 'ஓம் சிவாயபானீயம் சுவாகா' என்று பானீயங்கொடுத்து, முன்போல ஆசமனமும் அர்க்கியமுங் கொடுத்து, தூபதீபங் காட்டி, ஆசமனார்க்கியங் கொடுத்து, 'ஓம் சிவாய ஓம்' என்று புட்பாஞ்சலிசாத்தி, 'ஓம் கவசாய சுவாகா' என்று கர்ப்பூர ஆலாத்தி பணிமாறப் பண்ணுக.

## உ0. அர்ச்சனை.

'ஓம் பவாய தேவாய நம' 'ஓம் சர்வ தேவாய நம,' 'ஓம் ஈசானய தேவாய நம,' 'ஓம் பசுபதயே தேவாய நம,' 'ஓம் ருத்திராய தேவாய நம,' 'ஓம் உக்கிராய தேவாய நம,' 'ஓம் பீமாய தேவாய நம'

'ஓம் மகதேவாய நம,' 'ஓம் சிவகாம சுந்தரீ சமேத ஸ்ரீ சிதம்பர நடேசுவராய சிவாய மந்திர புஷ்பாணி சமர்ப்பயாமி,' என்று அர்ச்சனை பண்ணுக.

உக. சேபநிவேதனம்.

இடக்கையிலே ஒருபத்திரத்திற் புட்பமெடுத்து வைத்துக் கொண்டு, சிவமூலமந்திரத்தை நூற்றெட்டுத்தரஞ் செபித்து, அதற்கு இரக்ஷையும் அவகுண்டனமுஞ் செய்து, அதனை வலக்கையிற் கிரகித்துக்கொண்டு, அர்க்கியசலமுங் கூட்டி உற்பவமுத்திரைகொண்டு 'ஓம் இருதயாய சுவாகா' என்று சிவபெருமானுடைய வலக்கையிலே நிவேதித்துப், பின்பு செபித்த புட்பத்தைச் சாத்துக.

உஉ. தோத்திராதி.

அருட்பா ஐந்தினுலும் துதித்து, எழுந்து மூன்றுதரம் ஆன்மப்பிரதக்ஷிணமும் மூன்றுதரம் நமஸ்காரமுஞ் செய்து, இருந்து கைகழுவித் துடைத்துக்கொண்டு, திருமுறைமீதுள்ள புட்பங்களை இருகையினுலும் எடுத்து இருகண்களினும் ஒற்றிக்கொண்டு, திருமுறையில் வேண்டும்பாகம் வாசித்து, 'ஓம் சிவாய நம' என்று ஒரு புட்பஞ் சாத்தி 'ஓம்சிவாய சுவாகா' என்று அர்க்கியங் கொடுத்துத், திருமுறையைத் திருக்காப்பிடுக.

உஈ. அந்தகாரியம்

பின்பு நாராசமுத்திரை கொண்டு, 'அஸ்திராயபட்' என்றுபுட்பந் தெறித்து, அர்க்கியபாத்திரத்துள்ள மந்திரங்களை எழுப்பி, இருதயத்தில் ஒடுக்கி, நிருமாலியத்தைக் கழித்துப் பூமியைக் கோமயத்தினுலே மெழுகித்துத்தடவி விடுக.

திருச்சிற்றம்பலம்.

இப்புத்தகம் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை.

20, காரணேசுரர் கோவில் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

உ

கணபதி துணை

# விநாயகர் மஞ்சரி



“வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

[illegible] Press," Choolai, Madras,—1000 Copies.
(5 - 9 - 1951)

உ

சிவமயம்

# விநாயகர் மஞ்சரி

இஃது

பிக்ஷாண்டார் கோயில் பெருநிலக்கிழார்

ஸ்ரீமான்

**கோ. இராசகோபால பிள்ளையவர்கள் F.R.H.S.**

விருப்பத்தின்படி

திருமயிலை

**சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையால்**

தொகுத்து

ஷை கிழாரின் பொருளுதவிகொண்டு

பதிப்பிக்கப்பட்டது.

1951

கரவருஷ ஆவணிமீ ] [ விலை அணா 2



"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக்கணி வோமே."

உ
கணபதி துணை.

# பதிப்புரை.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

'விநாயகர்' எனப்படும் பிள்ளையாரின் வழிபாடு இந்தியா முழுவதும் உண்டு. இம்மூர்த்தியின் வழிபாடு நேப்பாளம், சைனு, திபேத் முதலிய பிறநாடுகளிலும் இருப்பதாக * 'Ganesa' என்னும் ஆங்கிலநூல் பல படங்களுடன் கூறுகின்றது. வட இந்தியாவில் விநாயகரை 'கணேஷ்' என்று அழைப்பர். இம்மூர்த்தியைச் சைவரும் வைணவரும் பேதமின்றி வணங்குவர். விநாயகர் என்னும் சொல்லின் சப்தார்த்தம் (1) துஷ்டர்களை அடக்குபவர்; (2) இடையூறுகளை நீக்குபவர்; (3) சுந்தரமுள்ளவர்; (4) தமக்கு மேலில்லா

---

* Ganesa—A Monograph on the Elephant-faced God by Alice Getty.—(London Publication.)

தவர் முதலியனவாம். விநாயகருக்குக் கணபதி, விக்கினேசுரர், மூத்த பிள்ளையார், ஏரம்பர் முதலிய பெயர்கள் உண்டு. இவரையே தனியாக வழிபட்டு வந்த சமயம் 'காணுபத்தியம்' என்று கூறப்படும். இச்சமயம் வடநாட்டில் முன்னிருந்ததாகத் தெரிகிறது. அதனலேபோலும் இப்போதும் பிள்ளையார் சதுர்த்தி பம்பாய் முதலிய இடங்களில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்விரதம் தென் இந்தியாவில் வடநாட்டைவிடக் குறைவாகவே அநுசரிக்கப்படுவது கண்கூடு. ஆனல், தென்னட்டிலுள்ள எல்லாக்கிராமத்திலும் பிள்ளையார் கோயில் இருந்தேதீரும். கோயில் கட்டிடம் இல்லாவிடினும் அரசமரத்தினடியிலாவது பிள்ளையார் உருவம் தொழப்படும். எக்கருமத்தைத் தொடங்கும்போதும் (சுபமோ அசுபமோ) பிள்ளையார் பூசை நடவாமல் இராது. கடிதம் எழுதுவதாயின் பிள்ளையார் சுழி முன் வந்து நிற்கும். பிள்ளையார் பூசையைச் செய்தபிறகே சிலர் உணவு கொள்வர். பிள்ளையாரை எவரும் வணங்குவர். இத்தகைய மூர்த்தியைப்பற்றிய தமிழ் நூல்களாவன:—

(1) கந்தபுராணம் (கயமுகன் உற்பத்தி, அனந்தன் சாபநீங்கு படலங்கள்)

(2) விநாயக புராணம் (பார்க்கவ புராணம்) கச்சியப்ப முனிவர் பாடியது.

(3) விநாயக மான்மியம் (பூபாலபிள்ளை பாடியது)

(4) பிள்ளையார் கதை (சுன்னாகம் வரத பண்டிதர்)

(5) பிள்ளையார் புராணம் (ஷை கதையின் சுருக்கம்போல்வது)

(6) மூத்த நாயனார் இரட்டைமணிமாலை (கபிலர்)

(7) நாரையூர் பொல்லாப்பிள்ளையார் இரட்டைமணிமாலை (நம்பியாண்டார் நம்பி)

(8) மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை (அதிராவடிகள்)

(9) காசித் துண்டி விநாயகர் திருவருட்பா (தருமபுரம் சிவஞான தேசிகர்)

(10) கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் (மாதவச் சிவஞான சுவாமிகள்)

(11) விநாயகர் திருவகவல் (ஔவையார்)

(12) விநாயகர் திருவகவல் (நக்கீரர்)

(13) கணேச புராணம் (ஓர் வீரசைவர் பாடியது)

(14) விநாயக பராக்கிரமம்

(15) விநாயக பரத்துவம் முதலியன.

இவற்றுள், ஔவையார் பாடிய அகவலே மிகச் சிறியதும், எவராலும் படிக்கப்படுவதுமாம். ஆனால், எவரும் அதன் நுண்மாண் பொருளை அறிந்து பாராயணஞ்செய்வதில்லை. இக்குறையை நீக்கும்பொருட்டு எனது அரிய நண்பரும், சைவசிகாமணியுமாகிய பிக்ஷாண்டார் கோயிற்பண்ணையார் திருவாளர் இராசகோபால பிள்ளையவர்கள், இந்நூற்கு ஓர் உரை எழுதுவித்து அச்சிட்டுப் பலருக்கும் உபகரிப்பது நலமென என்னிடம் சில மாதங்களுக்குமுன் கூறினர். அவ்விருப்பத்தை நிறைவேற்றும்படி சில நண்பரை உசாவினேன். ஒருவரும் எழுதித்தர முன்வந்திலர். இவ்வாறு திகைத்திருக்கும்போது, அதற்கு ஓர் உரைவிரிவாக முன்னரே திருநெல்வேலி நெல்லையப்பபிள்ளை என்பவரால் எழுதப்பட்டிருப்பதாக அறிந்தேன். அந்நூலைத் தருவித்துப் பார்த்தேன். அது தற்காலத்திற்கு ஒவ்வாததாகக் காணப்பட்டது. யோகாப்பியாசத்திற் கைவந்தவர்களே அந்நூலைப் படித்து இன்புறத்தக்கவர். நம்போலியர்களுக்கு அது பயன்படாது. ஆகலின், யானே சில குறிப்புக்களை எழுதத் துணிந்தேன். யான் என்றும் மாணவனேயன்றிப் பண்டிதனல்லேன். குற்றமிருப்பின் அறிஞர் பொறுப்பாராக.

விநாயகரகவலே சில மாற்றங்களுடன் "பிள்ளையார் கதை" என்னும் நூலில் "தத்துவ ஞானத் திருவகவல்" என்னும் பெயருடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இதனோடு விநாயக கவசத்தையும், துவாதச நாமங்களைக் குறிக்கும் பாக்களையும், அஷ்டோத்தர சதநாமாவளியையும், சில தோத்திரப் பாக்களையும், சில வசனங்களையும் சேர்த்து மஞ்சரியாகத் தொகுத்துள்ளேன். இந் நன்முயற்சியில் என்னை இழுத்தது விநாயகப்பெருமான் திருவருளே எனக் கூறலாம். 1924 - ம் ஆண்டில் மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலையை உரையுடன்வெளியிட்டேன். பிறகு, 1932-ல் பழனி விநாயகர் பள்ளைப் பிரசுரிக்க நேர்ந்தது. இப்போது இவ்வகவலை வெளியிடுகின்றேன். "விநாயகர் தம் கழல் பரவ, அடியேன் றூன்னைப் பிறவியினிற் செய்த தவம் பெரியவாமே."

பிள்ளையார் மூர்த்தங்கள் பன்னிரண்டு. அவை யாவன :—வக்கிரதுண்டர், சிந்தாமணி, கெசானனர், விக்கினராசர், மயூரேசர், பாலசந்திரர், தூமகேது, கணேசர், கணபதி, மகோற்கடர், துண்டி, வல்லபை.

அவர் விரதங்கள் மூன்று. அவை :—

சுக்கிரவாரவிரதம், விநாயகசதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என்பவை. விநாயக சதுர்த்தி ஆவணி மாதத்துச் சுக்கிலபட்ச சதுர்த்தியிலே, சுத்தமான புற்று மண்ணால் செய்த பிள்ளையார் உருவத்தை அறுகு, வன்னியிலை முதலியவற்றைச்சாத்தி, மாதுளம் பழம், அப்பம் முதலியவற்றை நிவேதித்துப் பூசைபுரிவது. இதனை அனுட்டித்துப் பேறுபெற்றோர் உமாதேவியார், சண்முகர், கர்த்தமன், நளன், ஆதிசேடன், அங்காரகன், புருசுண்டர் முதலியோர்.

விநாயக சட்டி* கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பக்ஷ பிரதமை முதல் மார்கழி மாதத்துச் சுக்கிலபக்ஷ சட்டியீறாகிய இருபத்தொருநாள் அனுட்டிக்கப் படுவது. இதனை அனுட்டித்தவர் திருமால், இலக்கண சுந்தரி முதலியோர்.

விநாயக சட்டி விரதத்தைப்பற்றி சிலரே அறிவார். அவ்விரதத்தின் சிறப்பு கந்த புராணத்தில்

---

* இவ்விரதத்தை யான் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அனுட்டித்து வருவதைத் தெரிவிக்கின்றேன். இவ் வறிக்கைத் தற்புகழ்ச்சிக் கருதியன்று. சிவநேயச் செல்வர்கள் இதனை அனுசரித்து, எம்பெருமான் கிருபையைப் பெற வேண்டுமென்பதே எனது ஆசை. "தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சோவாரும் சேகத்தீரே" என்றார் தாயுமானவர்.

அனந்தன் சாபநீங்கு படலத்திலும், விநாயக புரா ணத்திலும் விரிவாகக் கூறப்பட்டுளது.

விநாயகருக்கு விசேஷ பூசை நடக்கும் தலங்கள் திருச்செங்காட்டங்குடி, வலிவலம், நாரையூர், திரு வெண்ணெய்நல்லூர் முதலியன.

நாரையூர் பொல்லாப்பிள்ளையார் திருவருளால் நம்பியாண்டார் நம்பி தேவாரம், திருவாசகம் திரு விசைப்பா முதலிய திருமுறைகளை எமக்கு அளித் தார். திருவெண்ணெய்நல்லூர்ப் பொல்லாப்பிள்ளை யார் மெய்கண்டார் மூலமாக எமக்குத் தமிழ்ச் சிவ போதத்தை வெளிப்படுத்தினர். சிவபெருமானது 25 மூர்த்தங்களுள் விக்கினேசுரர் மூர்த்தமும் ஒன் ருகும். ஆகலின், விநாயகர் சிவபிரானுக்கு வேறல்லர். அவரைச் சிவபிரானது மூத்தகுமாரர் என்பது உப சாரமே.

"கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக வம்பலந் தமரசேகரனே"
(திருவிசைப்பா)

விநாயகரை உபாசித்துப் பேறுபெற்றவர் பலர். சேரமான்பெருமாள் நாயனர் கைலாசத்திற்குக் குதிரைமேற் சென்றபோது ஔவையார் தாம்

*

பூசித்துவந்த விநாயகர் அருளாலே குதிரைமேற் சென்றூரோடு ஒக்கச்சென்றுசென்று ஒரு கதை உண்டு. "குதிரையுங் காதம் கிழவியும் காதம்" என்ற பாடல் அதனைக் கூறும்.

இம் மஞ்சரியைக் கோவைப்படுத்தி, வெளியிடுவ தற்கு ஆஞ்ஞை தந்து உதவிபுரிந்த எனது நண்பரும், சைவசிகாமணியுமாகிய ஸ்ரீமான் கோ. இராச கோபால பிள்ளையவர்கட்கு எனது வந்தனம் உரிய தாகுக. "எங்கள் கணபதியே! பின்னையலாது ஐயனே! சூழாதென் அன்பு."

திருமயிலை,
கர—ஆவணி
விநாயகசதுர்த்தி தினம் } சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை.

உ

கணபதி துணை.

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே

முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறு தாரத்து அங்குச நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

# விநாயக கவசம்

---

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
    யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
    மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
    சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்கத் தடவிழிகள்
    பாலசந் திரனார் காக்க. (1)

கவின்வளரு மதரங்க சமுகர்காக்க
    தாலங்க ணக்கிரீடர் காக்க
நவில்சுபுகங் கிரிசைசுதர் காக்கநனி
    வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
    செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா
    சியைச்சிந்தி தார்த்தர் காக்க. (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க. (3)

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க. (4)

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்

ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க. (5)

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திக ழுதீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காங்க. (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓரையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க. (7)

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னை
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. (8)

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடி னும்பா லிடையூ றென்றும்
ஒன் றுறு முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன் னும். (9)

இது விநாயக புராணத்தில் பிந்திய மயூரேசர் திருவவதாரப் படலத்தில் உள்ளது. கவசம் காக்கும் மந்திரம். ஒவ்வொரு பாடலிலும் பூசை செய்வோரின் ஒவ்வொரு அங்கத்தையும், சிற்சில இடங்களில் அவ் வங்கத் தொழிலையும் சொல்லி, அதனை விநாயகர் காப்பார் என்று கூறப்படுகின்றது. விநாயகரது பல

நாமங்கள் ஒவ்வொரு உறுப்புக்கும் தொழிலுக்கும் வெவ்வேறுகக் காணப்படுதல் நோக்கத்தக்கது.

இக் கவசத்தைப் பக்தியுடன் தினந்தோறும் நியமமாகப் பாராயணஞ் செய்பவர்களுக்கு நோய், வறுமை, பேய் பிசாசு முதலியவற்றுல் ஏற்படும் துன்பம், மனக்கவலை முதலிய தீங்குகளெல்லாம் நீங்கும்.

# அஷ்டோத்தர சதநாமங்கள்

ஓம் விநாயகாய நமஃ
ஓம் விக்கினராஜாய நமஃ
ஓம் கணநாதாய நமஃ
ஓம் கஜாநநாய நமஃ
ஓம் மகோதராய நமஃ
ஓம் மகாதேவாய நமஃ
ஓம் ஸ்நிக்தாஞ்சனசமத்யுதயே நமஃ
ஓம் ஏகதம்ஷ்டிரோத்கடாய நமஃ
ஓம் தேவாய நமஃ
10 ஓம் கஜவக்திராய நமஃ
ஓம் மகாபலாய நமஃ
ஓம் நாகயக்ஞோபவீதிநே நமஃ
ஓம் நாகாபரணபூஷிதாய நமஃ
ஓம் சர்வார்த்தசம்பதாதாராய நமஃ
ஓம் கஜாத்தியக்ஷாய நமஃ
ஓம் வரப்பிரதாய நமஃ

ஓம் உருத்திரதநயாய நமஃ
ஓம் உதாராய நமஃ
ஓம் நாயகாய நமஃ
20 ஓம் பிரமதாதிபாய நமஃ
ஓம் பத்மராகத்யுதயே நமஃ
ஓம் சோமாய நமஃ
ஓம் ரத்தமால்யானுலேபனாய நமஃ
ஓம் அபலாய நமஃ
ஓம் பாலரூபிணே நமஃ
ஓம் சுமுகாய நமஃ
ஓம் சுரப்பிரியாய நமஃ
ஓம் பிரபவே நமஃ
ஓம் புண்ணியாய நமஃ
30 ஓம் பூர்ணாய நமஃ
ஓம் பூர்ணோதராய நமஃ
ஓம் புண்ணியகீர்த்தயே நமஃ
ஓம் புராதநாய நமஃ
ஓம் பர்த்திரே நமஃ
ஓம் சிவாய நமஃ
ஓம் சாந்தாய நமஃ
ஓம் சகந்நாதாய நமஃ
ஓம் சாசுவதாய நமஃ

ஓம் சுவேதபரிதாநாய நம:
40 ஓம் திரயக்ஷாய நம:
ஓம் கனகசுப்பிரபாய நம:
ஓம் சிவசாம்யாய நம:
ஓம் மஹாதேஜஸே நம:
ஓம் *மஹாபலபராக்ரமாய நம:
ஓம் சர்வக்ஞாய நம:
ஓம் ஞானசம்பன்னாய நம:
ஓம் சர்வாபரணபூஷிதாய நம:
ஓம் பாபாப்நோதநாய நம:
ஓம் தேவாய நம:
50 ஓம் அலக்ஷ்மிமலநாசநாய நம:
ஓம் குமாராய நம:
ஓம் காருண்யாய நம:
ஓம் காந்தாய நம:
ஓம் சர்வசித்திப்பிரதாயகாய நம:
ஓம் விபவே நம:
ஓம் ஈசாய நம:
ஓம் ஈசபுத்திராய நம:
ஓம் ஈப்ஸிதகர்த்தப்பிரதாயகாய நம:
ஓம் ஸ்ரீதாய நம:

---

* 'மஹாப்பிராக்ஞாயநம:' என்றும் பாடம்.

60 ஓம் சுபாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் ஏகவீராய நம:
ஓம் அநேகதாய நம:
ஓம் ஏகஸ்மை நம:
ஓம் ஏகப்ருதே நம:
ஓம் விசுவப்ருதே நம:
ஓம் விசுவபுஜே நம:
ஓம் விசுவஸ்மை நம:
ஓம் சர்வப்பிரபவே நம:
70 ஓம் சர்வபாவநாய நம:
ஓம் பாக்கியதாய நம:
ஓம் பவதாய நம:
ஓம் பாகிநே நம:
ஓம் போகதாய நம:
ஓம் போகபாவநாய நம:
ஓம் கவயே நம:
ஓம் காரியாய நம:
ஓம் கநீநாய நம:
ஓம் கர்த்திரே நம:
80 ஓம் கிருதவே நம:
ஓம் கிருதிநே நம:

ஓம் கிருத்தியவிதே நம:
ஓம் அத்யுக்கிராய நம:
ஓம் காந்ததர்கினே நம:
ஓம் கிருதாந்தகாய நம:
ஓம் ஸ்துத்தியாய நம:
ஓம் ஸ்தோத்திரே நம:
ஓம் ஸ்தோதகாய நம:
ஓம் ஸ்தோத்திராய நம:
90 ஓம் திரயீமயாய நம:
ஓம் வேதாய நம:
ஓம் வேதாந்தகிருதே நம:
ஓம் வேத்தியாய நம:
ஓம் விதஷாம்புத்திதாய நம:
ஓம் புத்தாய நம:
ஓம் ஓங்காராய நம:
ஓம் பிரமவிதே நம:
ஓம் பிராமணாய நம:
ஓம் பிரமணே நம:
100 ஓம் பிரமபராய நம:
ஓம் பராய நம:
ஓம் சர்வசாக்ஷிணே நம:
ஓம் சத்கதயே நம:

ஓம் சர்வலோகவெத்யாய நமஃ

ஓம் சர்வதாய நமஃ

ஓம் சுபகாய நமஃ

ஓம் அவ்ஙியாய நமஃ

108 ஓம் ஸ்ரீசித்திவிநாயகாய நமஃ

---

# தோத்திரப்பாக்கள்

## (விநாயக புராணம்)

1 பந்த மகற்று மனந்தகுணப்
பரப்பு மெவன்பா லுதிக்குமோ
எந்த வுலக மெவனிடத்தி
லீண்டி யிருந்து கரக்குமோ
சந்த மறையா கமங்க
ளனைத்து மெவன்பாற் றகவருமோ
அந்த இறையாங் கணபதியை
யன்பு கூரத் தொழுகின்றாம்.

2 உலக முழுதும் நீக்கமற
வொன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்க
ளுறாத மேலா மொளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
யூட்டுங் களைக ணெவனந்த
உலக முதலைக் கணபதியை
யுவந்து சரண மடைகின்றாம்.

3 இடர்கள் முழுது மெவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரு முயிர்க ளெவனருளாற்
சுரர்வாழ் பதியு முறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கரும மெவனல் முடிவுறுமத்
தடவு மருப்புக் கணபதிபொற்
சரணஞ் சரண மடைகின்றாம்.

4 மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர்க் கங்கை முதலான
தீர்த்த மாகி யறிந்தறியாத்
திறத்தி னானு முயிர்க்குநலம்
ஆர்த்தி நாளு மறியாமை
யகற்றி யறிவிப் பானெவனப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றாம்.

5 செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படுமப் பொருள்யாவன்
ஐய மின்றி யுளதாகு
மந்தக் கருமப் பயன்யாவன்

உய்யும் வினையின் பயன்விளைவி
னூட்டி விடுப்பா னெவனந்தப்
பொய்யி லிறையைக் கணபதியைப்
புரிந்து சரண மடைகின்றாம்.

6 வேத மளந்து மறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விகிர்தன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாத னெவன் எண் குணனெவனப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரண மடைகின்றாம்.

7 மண்ணி னோரைங் குணமாகி
வதிவா னெவன்நீ ரிடைநான்காய்
நண்ணி யமர்வா னெவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணு மிரண்டு குணமாகி
யியைவா னெவன்வா னிடைஒன்றாம்
அண்ண லெவனக் கணபதியை
அன்பிற் சரண மடைகின்றாம்.

8 பாச வறிவிற் பசுவறிவிற்
பற்றற்கரிய பரன் யாவன்
பாச வறிவும் பசுவறிவும்
பயிலப் பணிக்கும் பரன்யாவன்
பாச வறிவும் பசுவறிவும்
பாற்றி மேலா மறிவான
தேச னெவனக் கணபதியைத்
திகழுச் சரண மடைகின்றும்.

## தோத்திரப் பயன்

9 இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும்மைச்
சந்தி களிற்றோத் திரஞ்செயினுஞ்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறுமெண்
தினமுச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்த மகல ஓரெண்காற்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

# விநாயகரின் பன்னிருதிருநாமங்கள்

1 முனிவி லமரர் சுமுகரென
முனிவ ரேக தந்தரெனப்
புனித முறுங்கந் திருவர்கள்கிம்
புருடர் கபில ரெனக்குய்யர்
இனிமை யுறுஞ்சா ரணர்சித்த
ரிவர்கள் கெசகற் கன்னரென
மனித ரிலம்போ தரரென்ன
மருவும் விருகம் விகடரென

2 விலங்கல் மரம்விக் கினராசர்
வியாளங் கணநா யகர்திக்கின்
இலங்கு வோர்தூ மிரகேது
எழிலார் நதியா திகள்தீர்த்தம்
அலங்கும் கணாத் தியக்கர்பயி
ராதி கிருமி கீடங்கள்
துலங்கும் பால சந்திரர்மற்
றுயிரின் தொகுதி கசானனரே.

3 எனவே பெயரிட் டனைவோரு
மேத்தி யிறைஞ்சித் தத்தமது
மனமார் விருப்பி னுறைபதியின்
மருவி வாழ்ந்தா ரிப்பெயர்கள்
முனமார் கலியைக் கடைந்தெடுத்த
முதிர்வான் சுவையி லமிர்தேபோற்
கனமார் பெயரா யிரந்தம்முட்
கருத்தாற் றெரிந்து கொண்டனவாம்.

4 பெயரா யிரமு மெடுத்தோதிற்
பெருகும் பயனிப் பன்னிரண்டு
பெயர்மாத் திரையால் வருமென்னிற்
பெயர்த்தும் பெருமை பேசுவதென்
பெயரீ ரா று களிற்றுமுகப்
பெருமா னடியைப் பூசித்துப்
பெயரா வன்பின் யாவர்களும்
பேணுங் கருமந் தொறுமுரைப்பார்.

## விநாயகர் சொரூப இலக்கணம்

1 கங்கையும் பணிவெண் திங்களும் விரைத்த
கடுக்கையந் தொங்கலு மரவும்
தங்குபொற் சடையும் முக்கணுந் தாதை
தானுவென் றுயர்த்தமென் மலர்க்கை

அங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த
வாரணங்கு அன்னையென் றுணர்த்த
வெங்கலி முழுதுந் துடைத்தருள் பட்டி
விநாயகன் சேவடி பணிவாம்.

(பேரூர்ப்புராணம்)

(இது சிவமும் சத்தியுமாக விளங்குபவர் விநாயகர் என்பதைக் காட்டும்.)

2 முகமதியும் கட்கடுவும் களவளையும்
உத்தரிய முகபடாத்தும்
புகர்மதமா மழகளிறும் கரமலர்க்கற்
பகதருவும் பொருவில் பாதத்
திகழுறுபங் கயநிதியும் தோன்றுபரைப்
பாற்கடலிற் சிறந்து தோன்றும்
உகலருமைங் கரவமுதை யுளங்குளிரப்
பூரித்தே யுவகை பூப்பாம்.

(சிதம்பர சுவாமிகள்)

விநாயகரை அமுதமாகவும், அவர் தோன்றிய இடமாகிய பராசக்தியைப் பாற்கடலாகவும் உவமிக்கப்பட்டுளது.

## விநாயகரைப்பற்றி சிவபூசை விளக்கத்திற் கண்ட தத்துவ விளக்கம்

விநாயகர் யானை முகம், மூன்று கண்கள், ஐந்து கரங்கள், பெருத்த வயிறு, ஒரு கொம்பு, மும்மதம், இரண்டு திருவடி உடையவர். தமது கரங்களில் தந்தம், பாசம், அங்குசம், பாஞ்சசனியம் முதலிய வற்றைக் கொண்டுளார்.

கயமுகனைச் சங்கரிப்பதற்காக முரித்த ஒரு கொம்பை ஏந்தியது மும்மலங்களை நீக்குபவர் தா மென்பதைக் காட்டுதற்காம். உயிர்களைப் பாதிக்கும் ஆணவமலமாகிய யானையைப் பாசத்தாற் கட்டி, அங் குசத்தால் அடக்கி, மறைத்தலென்னும் கருணை புரி பவர் தாமென்பதை அறிவித்தற்காகப் பாசாங்குசங் களை ஏந்தினர். ஆணவத்தைப் போக்கி, உயிரை ஆட்கொள்பவர் என்பது ஆணவ சொரூபனாகிய கய முகனைப் பாசக்கயிற்றாற் கட்டி, அங்குசத்தால் அடக்கி, அவன் மலத்தை நீக்கிச் சுத்தனாக்கி, அவ னைத் தமக்கு வாகனமாக்கிக்கொண்டு பெரும்பேற்றை அளித்தார் என்பதால் போதரும். இவருடைய துதிக் கை விந்து நாத தத்துவத்தைக் குறிப்பித்து, இவரது ஞானசொரூபத்தை அறிவிக்கின்றது. அடியார்கள்

பசு ஞானத்தைக் கவளமாக ஒப்பிக்க, அதனை உண்டு தமது பேழை வயிற்றில் துறுத்துச் சிவஞானத்தைக் கொடுப்பவர் தாமென்பதை உணர்த்தும்பொருட்டுக் கவள உணவாகிய மோதகத்தை ஓர் கையிற்கொண்டார்.

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

(திருவிளையாடற்புராணம்)

சிவபெருமான் பஞ்சகிருத்தியாவதிபர் தாமென்பதை ஈசானம் முதலிய ஐந்து திருமுகங்களால் உணர்த்துதல்போல, விநாயகரும் துதிக்கை முதலிய ஐந்து கரங்களால் உணர்த்துகின்றார்.

இவர் உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளுமாய் விளங்குபவர். யானை முகமும் தேவ சரீரமும் உடையவர்.

உயர்திணையு மஃறிணையும் படைத்தளித்துத்
துடைக்குமுத லொருதானே யென்று
அயர்வற எத்தகையோரு மறிந்துய்யத்
தெரிக்குமடை யாள மேய்ப்பப்
பெயர்கொளுயர் திணையுமஃ றிணையும்
விரவிய வுருவிற் பிறங்குவானை
மயர்வடிய வர்க்கதற் றுமொரு மருப்பானை
விநாயகனை வணங்கு வாமால்.

(சூதசங்கிதை)

# பிரமாண்ட புராணக் குறிப்புகள்

பதினெண் மஹாபுராணங்களுள் கடைசியதான பிரமாண்ட புராணத்தின் உத்தரகாண்டத்தில் ஸ்ரீ ஹயக்ரீவருக்கும் அகஸ்தியருக்கும் நடந்த ஸம்வாத வடிவமாய் விளங்கும் "லலிதோபாக்கியான"த்தை விமர்சித்த பெரியார் எழுதுகின்றார்கள்: "மன்மதன் எரிந்த சாம்பலிலிருந்துண்டான ஒரு அசுரனைப் பராசக்தி தோன்றி, சம்ஹரித்து மறுபடியும் காமனைப் பிழைப்பித்த விஷயமே லலிதோபாக்யானத்தில் பிரதானமாய் விளங்குகிறது."

2. ஆத்ம கோசரவிருத்திகளாகும் ஸ்ரீ லலிதாம்பாளின் ஆத்மீக சக்திகளைக்கொண்டு, [அதாவது பராம்பாள், சியாமளா, வாராஹி, விக்னேஸ்வரன் ஷடாம்நாய தேவதைகள், பாலா, ஸம்பத்கரீ, அஸ்வாரூடை, நகுலி, ரஸ்மிமாலா தேவதைகள்] அநாத்ம, அவித்யா விருத்திகளாகும் பண்டஸைன்யத்தையும் பண்டாசுரனையும் நாசம் செய்தாள் என்பதே தத்வம்.

3. ஆதி சிவசக்திகளாகிய காமேஸ்வர காமேஸ்வரியின் புன்சிரிப்பு சந்தோஷமே, விக்னேஸ்வர

உத்பத்தி என்று இங்கே கூறப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவேண்டும்.

"காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஸ்வரா" என்பது லலிதா சகஸ்ரநாமாவளியில் உள்ள நாமம்.

4. அத்வைத ஞானத்திற்கு அனுகுணமான ஆத்மகோசர விருத்திகளைச் செழித்து ஓங்காமல் தடுக்கும் ப்ரத்யூஹ கூட்டமே பண்டாசுரனது விக்ந யந்திரம். அவற்றைத் தடுத்து அழிக்கவே காமேஸ்வர காமேஸ்வரியின் புன்சிரிப்பில் கணேஸ்வரன் தோன்றினர் என்பதை ஊகித்தறிந்தால் விக்னேஸ்வரனாகிய கணபதியின் அருள் இல்லாதுபோனால் எந்தக் காரியமும் சித்திபெருது என்பது தெரியவரும்.

5. யோகநிஷ்டையிலிருந்தும் கலைந்த பரமேஸ்வரன் தன் எதிரில் புஷ்ப பாணங்களுடன் நிற்கும் காமனை தன் மூன்ருவது கண்ணுல் எரித்தார். சித்திரத்தில் சமர்த்தரான சித்ரகர்ம கணபதி எரிந்துபோன மன்மதனது சாம்பலை ஓர் புருஷாகாரமாகச் செய்தார். அதைச் சிவன் தன் கண்ணுல் பார்த்தவுடன் அது ஒரு தேஜஸ்வியான புருஷனுய் உயிர்பெற்றெழுந்தது. கணேஸ்வரனுன சித்ரசேனன் அவனைத் தழுவி 'சிவனை ஸ்தோத்திரம் செய்' என்று சதருத்ரீய மந்தி

ரத்தை அவனுக்கு உபதேசித்தார். அங்ஙனமே அப் புருஷன் அதனை ஜபித்து சிவனை நமஸ்கரித்தான். சந்தோஷங்கொண்ட சாம்பசிவன், அவன் கோரிய படி சத்ருவின் பாதிப்பலம் அவனை வந்தடையும்படியும், சத்ருக்களது அஸ்திரசஸ்திரங்கள் அவனைப் பாதிக்காதபடியும், அறுபது ஆயிரம் ஆண்டு ராஜ்ய மாளும்படியும் வரந்தந்தார். இவனது செயலைக்கண்டு பிரஹ்மா 'பண்ட் பண்ட்'' என்று நகைத்தபடியால், இவனுக்கு "பண்டாசுரன்'' எனப் பெயர் உண்டாயிற்று.

"மஹா கணேச நிர்பின்ன விக்நயந்திர ப்ர ஹர்ஷிதா'' என்பது அடுத்த நாமம்.

ஆதி நடு அந்தமில்லா உமாபதியின் மைந்தன் ஆன கணேஸ்வரரே, இங்கேயும் ஏற்பட்டுள்ள ஆக்க அழிவுகளுக்கும் காரணராயிருப்பது நன்கு தெரிய வரும்.

"பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன் சரண அற்புத மலரே'' புத்திமுத்திகளைக் கொடுக்கும். ஆதலால், அவைகளை எமது தலைக்கணியாகச் சூடுவோம் என்பர் பெரியோர்.

6. ஸ்ரீ வள்ளிதேவிக்கும் ஸ்ரீ சுப்ரமண்யத்திற்கும் திருமணம் முடிப்பதற்கும் கணபதியின் திருவருள் தானே காரணமாயிருந்தது அல்லவா ?

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"

கணேசாய மங்களம் !

---

## மற்றைய சரிதைகள்

பிள்ளையார் சிவபிரானைச் சுற்றி வலம் வந்து மாங்கனி பெற்றதும், தம்பிக்காக யானையாக வந்து வள்ளி நாயகியை மணம்புரிவித்ததும் பாரதம் எழுதியதும் கீழ்க்கண்ட பாடல்களால் அறியலாம்.

1 கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர்—நம்பனையே
தன்னவலஞ் செய்துகொளுந் தாழ்தடக்கையாய் [என்னேய்
பின்னவலஞ் செய்வதெனே பேசு.

(நம்பியாண்டார் நம்பி)

2 அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

(திருப்புகழ்)

3 பொன்னே யனையாள் முன்போகுந்
திறல் நோக்கி
என்னே யினிச்செய்வதென் றிரங்கி
எம்பெருமான்
தன்னே ரிலாதமருந் தந்திமுகத்
தெந்தைதனை
முன்னே வருவாய் முதல்வா
வெனநினைந்தான்

அறியுற் றிடுபா ரதமான வெலாங்
குறியிற் றிடுதோன் முகர்குஞ் சரன்மேல்
எறியுற் றமருப் பினிலேடெனவாய்ப்
பொறியுற் றிடுமென் பதுபொய்த் திடுமோ.

(கந்த புராணம்)

# அரும்பதக் குறிப்பு

## (அகவல்)

வரி

1—சீதக்களபம் - சந்தனக்காப்பு

2—பாதம் - திருவடி (ஞானம்)—"மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" (பெரிய புராணம்)

4—வன்னம் - வர்ணம்
மருங்கில் - இடுப்பில்
எறிப்ப - பிரகாசிக்க

5—பேழை வயிறு - பெட்டிபோன்ற வயிறு—எல்லா உலகத்தையும் தம்மிடத்தில் அடக்கியவர் என்பதைக் குறிக்கும். "பேழைப் பெருவயிற்றோடும் புகுந்து" (கபிலர் இரட்டைமணிமாலை 4); "மந்தள வயிறனை" "குடவயிறன்" என்று கூறுவர் அருணகிரியார்.

6—வேழமுகம் - யானைபோன்ற முகம்; அதாவது பிரணவ சொரூபம்—"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" (கறுந்தொகை).
சிந்தூரம் - சிவப்புத் திலகம்—"ஐயபொட்டிட்ட அழகு" (திருவிசைப்பா)

7—அங்குச பாசம் - யானைத்தோட்டியும் பாசக்கயிறும்

8—நீலமேனி - யானைபோன்ற கறுத்த உடம்பு

9—நான்ற வாய் - தொங்குகின்ற யானை வாய்

10—மும்மதம் - கன்னமதம், கும்பமதம், கோசமதம்; இவை இச்சா ஞானக்கிரியா சக்திகளைக் குறிப்பன.

11—இரண்டு செவி - முறம்போன்ற காதுகள்.

12—முப்புரி நூல்—பூணூல்; சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான அற்புதம்—துரியாதீத நிலை - "சொற்பதங்கடந்த தொல்லோன் காண்க" (திருவாசகம்)

15—முப்பழம் - வாழை, மா, பலா—"மும்மலப்பழ வல்வினை" (திருவாசகம்); "வாழைக்கனி பலவின்கனி மாங்கனி" (கபிலர் இரட்டைமணிமாலை 4)

மூஷிக வாகனம் - பெருச்சாளி [ஆணவமலம்]

16—தாயாய் - தாய் குழந்தைக்குக் காட்டும் அன்புபோல. "தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவன்" (திருவாசக சதகம்)

19—ஐந்தெழுத்து - பஞ்சாக்கரம்—"நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே" (அப்பர் தேவாரம்)

20—திருவடி வைத்தல் - தீக்ஷைபுரிதல்—"இணையார் திருவடி என் தலைமேல் வைத்தல்" (திருவாசகம்). இறைவன் அப்பருக்கும் சுந்தரருக்கும் திருவடி தீக்ஷை செய்தது இங்கே சிந்திக்கத்தக்கது.

21—குருவடிவாகி—விநாயகரே குருவடிவத்துடன் எழுந்தருளி உபதேசஞ் செய்தல்.

24—கொடுவினை களைதல் - அருள்பாலித்தல்—"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" (கபிலர் இரட்டைமணிமாலை 5)

26—தெவிட்டாத ஞானத் தெளிவு - ஆராவமுது—"தேறலின் தெளிவே" "ஆராவமுதே ஆசைப்பட்டேன்" (திருவாசகம்).

27—ஐம்புலன் அடக்கும் உபாயம் - பஞ்சேந்திரியங்களால் நேரும் ஆசையை விடல்.

"நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே"

என்னும் திருவாசகக் கருத்தைக்கொண்டது 19—30 வரிகள்.

34—ஒன்பது வாயில் - ஒன்பது துவாரம் மனிதசரீரத்திலுள்ளது—"வேட்கை தணிவிப்பான் விநாயகனே" (கபிலர் இரட்டைமணிமாலை);

"ஒருமுழ முள்ள குட்ட மொன்பது துறையுடைத் தாய்
அரைமுழ மத கைல மதனில்வாழ் முதலே யைந்து"
(அப்பர் தேவாரம்)

35—ஆறு தாரத்து அங்குச நிலே - மௌனநிலே—"மோன மென்பது ஞான வரம்பு"

37—இடை பிங்கலேயின் எழுத்தறிவித்தல் கடையிற் சுழு முனைக் கபாலங் காட்டல் முதலியன யோகசாதனங் கள். எம்போலியர்களுக்கு விளங்காதவை.

41—குண்டலி - யோக சக்தி.
அசபை - ஓர் மந்திரம்

51—புரியட்ட காயம் புலப்படச் செய்தல் - தன்னே அறி வித்தல்; தன்னே அறிந்து, 'யான் எனது' என்னுஞ் செருக்கற்றால்தான் முத்தி சித்திக்கும். "நான் கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" (திருவாசகம்)

"யான்என தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (திருக்குறள்)

55—அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்—
"அண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத்தான்"
(கபிலர் இரட்டைமணிமாலை)

57—வாக்கு மனமு மில்லா மனோலயம் - "உணர்வுசூழ் கடந்த தோர் உணர்வு" (திருவிசைப்பா)

"சொல்லும் பொருளும் இறந்த சுடர்"
(திருவாசகம், புணர்ச்சிப்பத்து)

61—எல்லையில்லா ஆனந்தம் - "அளவிலா ஆனந்தம் அருளி" (திருவாசகம், பிடித்தபத்து 16)

66—கணுமுற்றி நின்ற கரும்பு - இன் இரசமே மிக இனிப்பாக இருக்கும். "கரும்பினு மினியன் இறைவன்" (அப்பர்).

67—வேடமும் நீறும் விளங்க நிறுத்தி மெய்த் தொண்டர் குழாத்தில் கூட்டல்

"கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீறு
இட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டப மேற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே"
(திருவாசகம், சதகம் 49)

72—விரைகழல் சரணே - உனது திருவடிக்கே யான் அடைக்கலம்—"நின் திருவடிக்காம் பவமே யருளுகண்டாய் அடியேற்கெம் பரம்பரனே" (திருவாசகம், திருச்சதகம் 5); "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" (அப்பர்)

இவ்வகவலில் 1—14 வரி வரை விநாயகரின் சொரூபம் விளக்கப்படுகிறது. 16—72 வரை விநாயகர் ஆசிரியருக்கு அளித்த அருட்செயல் கூறப்படுகின்றது. மூன்றடத்தில்

விநாயகரை விளிக்கின்றார் ஆசிரியர். கற்பகக் களிறே 14-ம் வரி, மூஷிக வாகன 15-ம் வரி, வித்தக விநாயக 72-ம் வரி

இந்த அகவலைப் பாடிய ஔவையார் பிள்ளையார் உபவாசி. பிள்ளையார் தமக்கு அருள்பாலித்த வகையைக் கூறி, அவரைத் தோத்திரஞ் செய்கின்றார். இதுவே இவ்வகவல் நுதலிய பொருளாம். "நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் முதுமொழிக்கிணங்க, இதை நமக்கு அளித்துள்ளார். யாம் ஓதி இன்புறுவோமாக. நூல் நுதலிய பொருள் திருவடிப்பற்றுதலால், அப்பதத்தை முதலிலும் இடையிலும் கடையிலும் வைத்துள்ளார்.

ஔவையார் விநாயகர் திருவடியைச் சரணமாக அடைந்தார். மாதுசிரோமணியாகிய காரைக்கால் அம்மையார் நடராசப்பெருமான் திருவடிநீழலை அடைந்தார்.

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீ ழிருக்க என்றார்".

இத்திருவடியின் சிறப்பை,

"இறுமாந் திருப்பன்கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ"

என்று அப்பர் கூறுகிறார்.

---

## விநாயக கவசம்

### (உறுப்பும் காப்பாளரும்)

1—சிகை - விநாயகர்; தலை - மகோற்கடர்; நெற்றி - காசிபர்; புருவம் - மகோதரர்; விழிகள் - பாலசந்திரர்.

2—அதரம் (உதடு) கசமுகர்; தாலம் (நாக்கு) - கணக்கிரீடர்; சுபுகம் (கன்னம்) - கிரிசை (பார்வதி சுதர்); வாக்கு- விநாயகர்; நகை - துன்முகர்; செவி - பாசபாணி; நாசி - சிந்திதார்த்தர்.

3—முகம் - குணேசர்; களம் (கழுத்து) - கணேசர்; இரு தோள் - கந்தபூர்வசர்; முலை - விக்கினவிநாசர்; இதையம் (இருதயம்) - கணநாதர்; அகடு (வயிறு) - ஏரம்பர்.

4—பக்கமிரண்டு (விலாப்புறம்) - தாரதரர்; பிருட்டம் (முதுகு) - விக்கினகாரர்; லிங்கம் (குறி) - வியான் பூஷ்ணர்; குய்யம் (குதம்) - வக்கிரதுண்டர்; சகனம்- கணபர்; ஊரு (தொடை) - மங்களமூர்த்தி.

5—முழந்தாள் - மகாபுத்தி; பாதம் - ஏகதந்தர்; கரம் - க்ஷிப்பிரப்பிரசாதனர்; முன்கை - ஆசாபூரகர்; விரல் - பதுமஹஸ்தர்; நகங்கள் - விநாயகர்; கிழக்குத்திசை - புத்தீசர்.

6—அக்கினி திசை - சித்தீசர்; தென்திசை - உமாபுத்திரர்; நிருதி திசை - கணேசுரர்; மேற்கு திசை - விக்கின வர்த்தர்; வாயு திசை - கசகன்னர்; உதீசி (வடக்கு) திசை - நிதிபர்; வடகிழக்கில் - ஈசநந்தனர்.

7. பகலில் காப்பவர் - ஏகதந்தர்; இரவிலும், சந்தியா வந்தனகாலங்களிலும் காப்பவர் — விக்கினகிருது; இராக்கதர், பூதம், பேய் முதலியவற்றால் ஏற்படும் துயரத்தை நீக்குபவர்—பாசாங்குசர்.

8—எல்லா உலகசுகமும் கொடுத்துக்காப்பவர்—சர்வாயுதர் மக்கள் உறவினர் முதலியோரைக் காப்பவர்—மயூரேசர்.

9—ஜீவிதம் (ஜீவனம்)-கபிலர்; கரியாதி (குற்றம் குறை) - விகடர்.

---

## பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | பதிப்புரை | ... | iii |
| 2. | விநாயகர் அகவல் | ... | 1 |
| 3. | விநாயக கவசம் | ... | 5 |
| 4. | அஷ்டோத்தர சதநாமாவளி | .... | 10 |
| 5. | தோத்திரப்பாக்கள் | ... | 16 |
| 6 | விநாயகரின் பன்னிருதிருநாமங்கள் | | 20 |
| 7. | பிரமாண்ட புராணக் குறிப்புகள் | ... | 26 |
| 8. | அரும்பதரக் குறிப்பு | ... | 31 |

இந்நூல் கிடைக்குமிடம் :—

சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை,

26, காரணேசுரர் கோயில் தெரு,

மயிலாப்பூர், சென்னை.

# பதிப்புரை.

யாழ்ப்பாணத்து மல்லாகம் சி. செந்திநாதையர் எழுதிய இச்சிறு நூல் சென்னை ஞானப்பிரகாச அச்சுக்கூடத்தில் கடந்த 1892-ம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. கிறிஸ்துமதப் போதனைக் கிளர்ச்சியால் இந்து மதப் பிரசாரணம் அக்காலத்தில் அதிதீவிரமாக நடந்தது. Hindu Tract Society மூலமாகப் பல சிறு பிரசுரங்கள் வெளிவந்தன. அப்பிரசுரங்களுள் ஞானரத்நாவளியும் ஒன்று. இது உருவத்திற் சிறியதேயாயினும் பெயருக்கேற்ப, பல அரிய நுட்பங்களை விளக்குவதாம். இக்காலத்தில் உலோகாயதம் எங்கும் அதிகமாகப் பரவியிருப்பதால், இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டியது அவசியமாயிற்று. இப்பிரசுரத்தின் அச்சுச் செலவின் பெரும்பாகத்தை எனது நண்பரும் சைவசிகாமணியுமாகிய பிக்ஷாண்டார் கோயில் மிராசுதார் இராவ்பகதூர் கோ. இராசகோபால பிள்ளையவர்கள் ஏற்றுக்கொண்டனர். அப்பெருந்தகையாரின் உதாரகுணத்திற்கு அறிகுறியாக இப்பதிப்பை அவர்களுக்கே அர்ப்பணஞ்செய்கின்றேன். இப்பதிப்பிற் பல இன்றியமையாத திருத்தங்களும் மாற்றங்களும் புரிந்து புதுப்பித்துதவிய எனது நண்பர் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சே. வெ. ஜம்புலிங்கம்

திருமயிலை<br>
சர்வதாரி<br>
தைப்பூசம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஞான ரத்நாவளி

1 விநாயகர் ஓங்கார வடிவினர்.

ஓங்கார வடிவானவுன் பாததாமரையு
முபய பரிபுரமறைகளும். (1)

(துண்டி விநாயகர் திருவநட்பா)

ஓங்காரத் தனியுருவே போற்றி. (2)

(விநாயகர் போற்றித் திருவகவல்)

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே. (3)

(நறுந்தொகை)

2 சிவனும் உமையும் பிதா மாதா.

கடவுளுடைய அன்பும் இரக்கமும் அருளென்றும் அருட்சத்தி யென்றும் சொல்லப்படும். ஆதலால் கடவுளை நமது பரமபிதா என்றும் அவருடைய அருட்

சத்தியைப் பரமமாதா என்றும் சொல்லுகிறோம். நாம் ஒருவரிடத்திலே எவ்வளவு பற்றோடிருந்தாலும் அவருக்கு ஒரு நன்மையைச் செய்யும்போதுதான் அந்தப் பற்று வெளியாகின்றது. அதுபோலக் கடவுள் உலகங்களைப் படைத்து ஆன்மாக்கள் வாழ்வதற்கு வேண்டிய சரீரம் முதலியவற்றைக் கொடுக்கும்போதுதான் அவருடைய அருட்சத்தி வெளியாகின்றது. இப்படி அருட்சத்தி வெளியாதல் அவர் அருட்சத்தியோடு சேர்தலாகச் சொல்லப்படும். இது திருக்கலியாணமென்றும் கூறப்படும்.

ஈசனரு ளிச்சையறி வியற்ற லின்ப

மிலயமொடு போகமதி கார மாகித்

தேசருவ மருவுருவ முருவ மாகித்

தேவியுமாய்த் தேசமொடு செல்வ மாகிப்

பேசரிய வுயிரையெலாம் பெற்று நோக்கிப்

பெரும்போக மவையளித்துப் பிறப்பினையு மொழித்திட்

டாசகலு மடியருளத் தப்பனுட னிருக்கு

மன்னையருட் பாதமலர் சென்னி வைப்பாம். (1)

அறுவகைச் சமயத் தோர்க்கு
மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா
கமங்களின் குறியி றந்தங்
கறிவினி லருளான் மன்னி
யம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி (2)
சென்னி வைப்பாம்.

(சிவஞான சித்தியார்)

3 நடராசர்

சிவத்தியானத்திற்கு நடராச வடிவம் மிகவும் பொருத்தமானது. அவ்வுருவத்திலடங்கிய ஒவ்வொரு பாகமும் அரிய உண்மைகளை விளக்கி நம்மை நல் வழியிற் செலுத்தத்தக்கது. ஒரு திருக்கரத்திலேயுள்ள உடுக்கையானது படைத்தற்றொழிலைக் குறிக்கின்றது. கடவுள் நம்மைப் படைத்தது நாம் மெய்ப்பொருளாகிய அவரையடைந்து பேரானந்தத்தைப் பெறுதற்காக என்பதை அது காட்டத்தக்கது. மற்றொரு திருக்கரம் அபயமளிக்கின்றது. அதாவது: நாம் உங்களைக் காப்போம் நீங்கள் பயப்படவேண்டாம் என்னும் குறிப்பையுடையது. வேறொரு திருக்கரத்திலே நெருப்பு இருக்கின்றது. அது அழித்தலைக் குறிக்கின்றது. நான்காவது திருக்கரம் குஞ்சித பாதத்தைக் காட்டுகின்றது.

திருவடிகளுள் ஊன்றிய பாதம் முயலகனை மிதித்து ஆணவத்தை நசித்தலைக் குறிக்கின்றது. தூக்கியதிருப்வடி அவர் நம்மைத் தம்மோடு சேர்த்துத் தம்மை போல் ஆக்குவார் என்னும் அருளலைக் காட்டுகின்றது.

தோற்றந் துடிய தனிற் றேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்-ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதி ரோதமுத்தி
நான்றமலர்ப் பதத்தே நாடு.

(உண்மை விளக்கம்)

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பி னிலவ ளாகமும்
ஏனைப் புவனமு மெண்ணீங் குயிரும்
தானே வகுத்ததுன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுன் னமைத்தபொற் கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுல கடங்கலும்
மாற்றுவ தாரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றாட்டுவ தாகுநின் னூன்றிய பதமே
அடுத்தவின் னுயிர்கட் களவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சித பதமே
இத்தொழி லைந்துநின் மெய்த்தொழில்

(சிதம்பரமும்மணிக்கோவை)

4 சிவனுடைய அங்க பிரத்தியங்கம் சாங்க உபாங்கமனைத்தும் அருள்வடிவே.

உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதிசாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னமலன் றானே.

(சிவஞானசித்தியார்)

அங்கமாவன:-சிரசும், முகமும், இருதயமுமாம்.

பிரத்தியங்க மாவன:- மார்பும், கண்டமும், ஸ்தனங்களும், தோள்களும், நாபியும், உதரமும், குஹ்யமும், கண்களும், நாசியும், காதும், கைகளும், பாதங்களும், விரல்களும், தொடைகளும், முழந்தாள்களும், கணைக்கால்களுமாம்.

சாங்கமாவன:- ஆரிண்ணியாதிகுணத்திரயம்-திரிசூலம், சத்தியம்-பரசு, பிரதாபம்-கட்கம் தர்பேத்தியம் வச்சிரம் அநுக்கிரகம்-அபயமுத்திரை, ருத்தியாதி சுத்தமாயை-நாகம், அதோமாயை-பாசம், விவர்ணம்-அங்குசம், சத்தநாதம்-கண்டை, பாசசங்காரம்-அக்நி

உபாங்கமாவன:—வஸ்திரம், உபவீதம், மாலை,

கந்தம், ஆசனம், ஆபரணம், ஆவரணம் என்னும் இவ் வேழுமாம்

(5) சிவனுடைய சந்திரன்; ஏறூர்தல்; அவனவளது நிலே; முக்கண், மான், சூலம்: அட்டமூர்த்தம்.

எல்லாம் அறிபவர் (சருவஞ்ஞர்) என்பதும் தூமதியைச் (சந்திரனை) சூடினமையாலும், எப்பொருட்கும் இறைவரென்பது தருமவடிவினதாகிய ஏறூர்தலினுலும், அவர் எவர்க்கும் எவற்றிற்கும் பொதுநிலையரென்பது "அது அவள் அவன்" என நின்றமையானும் அவரிடத்திலே முத்தி வேள்வியும் தொக்கவென்பது முக்கண்ணர் என்றமையானும், வேதநாயகரென்பது வேதங்களைக் (கால்களாகக்கொண்ட) மான்மறி உடைமையானும், அவர் பிரம விஷ்ணு ருத்திரரென்னும் அம் மூவராய் நின்றமை ஒருதாட்சூலமேந்துதலினுலும் அவர் உலகத்துண்மையினரென்பது (பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன் ஆன்மா என்னும்) அட்டமூர்த்தத்திலும், அவருடைய பிறவடிவும் வண்ணமும் அவர் பெருமையையே யுணர்த்துமெனவும் அறியப்படும்.

தூமதி சடைமிசைச் சூடுத றூநெறி
யாமதி யானென வமைத்த வாறே
அறனுரு வாகிய வானே றூர்தல்

இறையவ னியானென வியற்றுமாறே
அதவவளவ னெனநின் றமை யார்க்கும்
பொதுநிலை யானென வுணர்த்திய பொருளே
முக்கண னென்பது மூத்தீ வேள்வியிற்
றொக்க தென்னிடை யென்பதோர் சுருக்கே
வேத மான்மறி யேந்துதன் மற்றதன்
நாதனு னென்ன நவிற்று மாறே
மூவிலை யொருதாட் சூல மேந்துதன்
மூவரும் யானென மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில்
உண்மை யானென வுணர்த்திய வாறே
நில்நீர் தீவளி யனன்வா னென்று
முலவாத் தொல்புக ழுடையோ யென்றும்
பொருளுநற் பூதப் படையோ யென்றும்
தெருளநின் றுலகினிற் றெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை யுணர்த்தவு முணராத்
தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வண்மையிற் சுழலு மாந்தர்க்
சாதியாகிய வறுதொழி லாளர்

(பதினோராந்திருமுறை.)

## 6 திருவாசி

ஓங்காரமே திருவாசி

ஓங்கார மேநற் றிநவாசி யுற்றதனில்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம் — ஆங்காரம்
அற்றா ரறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்.

(உண்மை விளக்கம்)

## 7 இடபம்.

சிவனேறும் இடபம் ஞானமயம்

சொன் மறைத்தொகை யாகம முதலிய துதிப்பப்
பொன்மை பெற்றதன் கோசகர் நீங்கியே பொற்றாள்
வன்மை பெற்றதுண் டோதான் மொய்ம்பிடை வைத்துச்
சின்ம யத்தனி மால்விடை யேறினன் சிவனே.

(கந்தபுராணம்.)

## 8 பூணூல். சிகை

பூணூல் வேதாந்தத்தையும், சிகை ஞானத்தையும் குறிக்கும்.

நூலுஞ்சிகையு நுவலிற்பிரமமோ
நூலதுகாற்பாச நுண்சிகைகோசமாம்
நூலதுவேதாந்த நுண்சிகைஞானமாம்
நூலுடையந்தணர் காணுநுவலிலே,

(திருமந்திரம்.)

## 9 முடி

முடி அத்துவிதத்தைக் குறிக்கும்

அத்வைதகிரந்தி:.

(பாசுபதப் பிரமோபநிடதம்)

## 10 கந்தசுவாமி

ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகனுருவங்காணப்படும்
ஓங்கார மூலப்பொருளாயுயிர்தோறுமென்று
நீங்கா தமருங் குமரேசனே (1)

ஓமெனப்படுங்குடிலையே யொப்பிலாமுருகன்
மாமுகத்துளொன்றும் (2)

(கந்தபுராணம்.)

ஆங்காரமு மடங்கா ரொடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வாரியம தூதருக்கே.

(கந்தரலங்காரம்)

## 11 கந்தசுவாமியின் ஆறுமுகம்

சிவபெருமானுக்குரிய சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, சுவதந்திரத்துவம் என்னும் சுத்த சாட்குணங்களும் கந்தசுவாமியுடைய ஆறுமுகங்கள் என்பர். (சருவஞ்ஞதை—முற்றறிவு; திருப்தி—வரம்பிலின்பமுடைமை; அநாதி போதம்—இயல்பாகவே பாசங்களினீங்குதல், அலுப்த

சத்தி—பேரருளுடைமை; அநந்தசக்தி — முடிவிலாற்றலுடைமை; சுவதந்திரத்துவம்—தம்வயமுடைமை,

எவர்தம் பாலு மின்றி யெல்லை தீ ரமலற்குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த வென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகு மையன்
ஆவிக ளருளு மாற்ற னறுமுகங் கொண்டா னன்றே.

(கந்தபுராணம்)

## 12 · வேலாயுதம்

ஆன்மாக்களுக்கு முத்தியின்பங் கொடுக்க விரும்பும் விருப்பமெனப்படும் இச்சாசத்தியும், அதற்கு வேண்டுமவைகளை அறியும் அறிவெனப்படும் ஞான சத்தியும், அறிந்தவைகளைச் செய்யும் செயலெனப்படும் கிரியா சத்தியுமாகிய மூன்று சத்திகளின் அடுக்கு வேலாயுதமாம் என்க.

இச்சா ஞானக் கிரியையெனு
மிவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுந்திட்
டச்சா றழி யறச்சுவற்று
மயில்வே லொருகை வலத்தமைத்து,

(திருத்தணிகைப் புராணம்.)

## 13 தெய்வயானையம்மை வள்ளியம்மை

தெய்வயானையம்மை வள்ளியம்மையென்னும் இருவரும் முறையே சுப்பிரமணிய சுவாமியினுடைய ஞான சத்தியும் கிரியாசத்தியுமாவர்.

கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவ தாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்.

(கந்த புராணம்)

## 14 ஞானபூசை

ஆன்மா சிவனுடைய பரசிவ பூரண ஞானப்பிரகாசத்தில் அழுந்துவது ஆவாகனம். அதில் நிலைபெறுதல் தாபனம். ஆன்ம அறிவு சிவபூரணத்தினும் சிவபூரணத்துள் ஆன்ம அறிவினும், ஒன்றையொன்று பிரியாதிருத்தல் சந்நிதானம். ஆன்ம அறிவு என்றும் ஒழிவின்றிச் சிவத்திலே சமைந்துபோதல் சந்நிரோதனம். ஆன்ம சுத்தியின்பொருட்டுக் கொடுக்கப்படுவது பாத்தியாசமனார்க்கியம். மோக்ஷ இன்பத்தின் பொருட்டுக் கொடுக்கப்படுவது புஷ்பம். நின்மலசத்தியின் பொருட்டுச் செய்யப்படுவது மஹாபிஷேகம். அறியாமையை ஒழித்து அறிவைப் பெறும்பொருட்டுக்

கொடுக்கப்படுவது தூபதீபம். சிவானுபூதியின் பொருட்டுக் கொடுக்கப்படுவது நைவேத்தியம். சிவவியாபகம் ஆன்மாவில் விளங்குதலின் பொருட்டுச் செய்யப்படுவது பிரதட்சிணம். ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாதல் நமஸ்காரம்.

இப்படித் தரைமுதற் சமனை யீறாய்ச்,
செப்பிவியா பிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவிலழுந் துதலாவா கனமே
அலையா தழுந்த நிலைபெறல் தாபனம்.
இவன்தன தறிவு சிவன்பூ ரணத்திலுஞ்
சிவன்பூரணத்துவம் இவன்தன தறிவிலும்
ஒன்றையொன் றகலா துறவுசெய் திருப்ப
தோன்றிய சந்நி தானமென் றுரைப்பர்
இவனிடத் துறமறி
வென்று மொழிவறச்
சமைவது தானே சந்நிரோதனமே.
பாத்தியாசம னர்க்கியம் பழுதக
லான்மசுத்தி நிமித்த மாகவும்,
நறுமல ரதனை நல்வீட் டின்பம்
குறுகுத லேது வாகவுங் கொடுத்து
நிகழ்மல சுத்தி நிமித்த மாக
மகிழ்வுட னேதிரு மஞ்சனம் பண்ணி,

ஞான விளக்க நண்ணுதற் பொருட்டுத்
தூப தீபந் துதைந்தினி தளித்து
பின்மன மமைவு பிறத்தற் பொருட்டு,
நைவேத் தியமுக வாசமு நல்கி,
அயன்மா லிவர்க்கீ மரகையின் பொருட்டுச்
செயமாண் புறவெதிர் தண்டம் பண்ணி

(சதாசிவரூபம்)

ஆவாஹநம் சாத்மநி சித்ப்ரகாசே
சத்ர ஸ்திதி: ஸ்தாபநமீச்வரஸ்ய
ஸாந்நித்ய மாத்மேச்வரஸந்நிதாநம்
நிரோதநம் ஸ்வஸ்ய சிவே நிரோத:,,

மாயாத்வயஸ்ய க்ஷாளநம் பாத்யாசமநாதிகம்,
கர்மத்ரயவிநாச: ஸ்யாதர்க்யமஜ்ஞானமோசநம்,,
மஹாபிஷேகம் நைர்மல்யம் வஸ்த்ரசுத்தநிராவ்ருதி:,
அஜ்ஞாநவாஸநாநா சோதூபோ தீப: ஸ்வயம்ப்ரபா,
சிவாநுபூதிர் நைவேத்யம் பாநீயம்ச ஸுவாஸிதம்
கஷாயகளநம் ஜாதம் தாம்பூலம் முகவாஸநம்
ப்ரதக்ஷிணம்ச ஸர்வத்ர வ்யாபகம் ஸஹ சம்புநா
ஸரித்ஸமுத்ரஸம்யோகாஜ்ஜலம் ஸமரஸம் யதா
ததா சாத்மஸ்வயோர் யோகாந்நமஸ்கார: ப்ரகீர்த்யதே.

(பூஜாஸ்தவம்)

மானச சுத்தியே நல்லபுஷ்பம். பொறுமையே பாத்தியாசமனர்க்கியம். நிச்சயமாக நிலைபெற்றிருக்கும் புத்தியே குங்கும சந்தனாதியாம். மானச (தூப) பாத்திரத்திலே பிராணவாயுவே அக்கினி. அகங்காரமே பரம தூபம். சர்வப்பிரமாணமாகிய சிற்சத்தியேதீபம். பார்த்திவோபசாரம் நைவேத்தியம். ஆப்பியோபசாரம் பானீயம். தைஜஸோபசாரம் கண்ணாடி. வாயவீயோபசாரம் விசிறி. வைஹாயஸோபசாரம் ஸ்தோத்திரம்.

ஹ்ருத்பத்மே மநஸாவிபாவித மஹாமாயோபரிஸ்தாஸநே
த்யேயோ தீபசிகாக்ருதிஸ்ஸுகுஸுமம் பாவக்ஷமார்க்யம்ஜலம்
லேபோ நீரவஸாயிநீபரசிவே ப்ராணோ நலோ மாநஸே
பாத்ரே ஹ்ருங்க்ருதிரேஷ ஏவ பரமோ தூபோ தமோநாத்மக:
தீபஸ்ஸத்விஷயா ஸூத்ருப்திகரணே கந்தாதய க்ஷமாதிகா:
பாநீயாதிகதர்ப்பணவ்யஜநகஸ்தோத்ராதிகா வேதநம்,
நைவேத்யம் ஸ்வயமுத்யதா ஸமநயாஸுக்ஷடாங்கஹ்ருந்நோயத
யுக்த ஸ்ய ஸ்வயமேவ நாதமநுநா ஜாப: ஸமாப்யுத்தித:,

(ஸித்தாந்தஸாராவளி).

## 15 பக்திபுஷ்பம்

சித்தந் தெளிவீர்கா, ளத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே.

(தேவாரம்)

கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன அஷ்டபுஷ்பமாம். (சிவஞானபோதவுரை)

## 16 விரதம்.

கொல்லா விரதமே விரதம்.

கொல்லாவிரதம் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே

(தாயுமானவர்)

## 17 ஞானம்விளக்கு.

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன வஞ்செ ழுத்துமே.

(தேவாரம்)

## 18 கும்பலக்ஷணம்.

கும்பத்திலே போர்த்த வஸ்திரம் தோலாகவும்: கும்பத்திலே சிவப்பேறப் பூசியமண் இரத்தமாகவும் குடத்துமண் மாமிசமாகவும், கும்பத்தில் நிறைந்தசலம் மேதஸாகவும், தர்ப்பையினுற்செய்த கூர்ச்சமானது எலும்பாகவும், நாலுபக்கத்துஞ் சுற்றப்பட்டநூல்

நரம்பாகவும், கும்பத்துட்போடப்பட்ட நவரத்தின சுவர்னபுஷ்பமானது சுக்கிலமாகவும், நியசிக்கப்பட்ட மந்திரம் உயிராகவும், கீழே இடப்பட்ட நெல்லு அரிசி எள்ளு பயறு உளுந்து துவரை கோதுமை என்னும் ஏழுவகைத்தானியமும் ஆசனமாகவும் சொல்லப்படும்.

வஸ்த்ரம் சர்ம விலிப்தம்ருச்ச ருதிரம் மாம்ஸம்கடேம்ருத்திகா
மெதஸ்தோயமதாஸதி கூர்ச்சமபித: ஸம்வீதஸஸூத்ரம் விரா
சுக்லம் மத்யசரத்நஹேமகுஸுமம் ந்யஸ்தோ மநுர் ஜீவிதம்
தாந்யம் ஸப்தகமாஸநம் மகவிதௌ சம்போரிதம்பூஜநம்,

(சித்தாந்த ஸாராவளி)

## 19 முப்புரம்

முப்புரமென்பது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மல காரியமாமென்க.

அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கண் மூடர்கண்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே.

(திருமந்திரம்.)

## 20 விபூதி

பாசத்தை ஒழிப்பது விபூதி

தேசமலி பொது ஞானச் செவ்வொளியுந்திகழ்பதியாம்
ஈசனது நடத்தொழிலுமிலங்குபல வுயிர்த்தொகையும்

பாசமுமங் கதுகழியப் பண்ணுதிரு வெண்ணீறும்
ஆசிறு திருவெழுத்தஞ்சு மதாதியிவை யாறுக.

(கோயிற்புராணம்.)

உண்மாசு கழுவுவது நீறென்றே
வுபநிடத முரைப்பக் கேட்டும்.
(திருவிளையாடற் புராணம்)

## 21 மஹோற்சவம்

மஹோற்சவநாள் பத்தினுள், முதல்நாள்விழா தூல நீக்குதற் பொருட்டும், இரண்டாநாள்விழா தூலசூக்குமம் நீக்குதற்பொருட்டும், மூன்றாநாள்விழா மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மலமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், நாலாநாள் விழா நாற்கரணமும், நால்வகைத்தோற்றமும் நீக்குதற்பொருட்டும், ஐந்தாநாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும், ஐந்துமலமும் நீக்குதற்பொருட்டும், ஆறாநாள் விழா காமாதியாறுங் கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீக்குதற்பொருட்டும், ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும், கலாதிகளேழும், மாயாமல குணமேழும் நீக்குதற்பொருட்டும், எட்டாநாள்விழா எண்குணம் விளக்குதற்பொருட்டும், ஒன்பதாநாள் விழா மூன்று

ருவும், முத்தொழிலும், மூன்றிடத்துறைதலும் இலை யெனற்பொருட்டும், பத்தாநாள் விழா பராநந்தமாக் கடலில் அழுந்துதற் பொருட்டும் செய்யப்படும்.

(சைவசமயநெறியுரை)

## 22 கொடி மரம்

திருவிழாக்காலத்திலே கோயிலின் கொடிமரத்திலே சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். அச்சீலையிலே இடபமாகிய பசு எழுதப்பட்டிருக்கின்றது. சீலையோடு தர்ப்பைக் கயிறும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. கொடிமரம் சிவம் என்றும் இடபம் எழுதப்பட்ட சீலை ஆன்மாவென்றும் தர்ப்பைக்கயிறு பாசமென்றும் சிவாகமம் கூறுகின்றது:-

பதி: ஸ்தம்ப இதி ப்ரோக்த: பசுராத்மா இதி ஸ்ம்ருத:
ரஜ்ஜு: பாச இதிப்ரோக்த ஸ்த்ரிவிதாஸ்தே ஸ்மரந்சதி

கடவுளிடத்தே ஆன்மா தங்கியிருப்பது போலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடிமரமும் சீலையும் இருவேறு பொருள்களாயினும் அவற்றைப் பார்ப்பவர்கள் கொடி மரமாகிய ஒரே பொருளாக மதிக்கின்றனர். சிவமும் ஆன்மாவும் அத்துவிதசம்பந்த முடையவை என்பதை இது விளக்குகின்றது. கயிறு சீலையைச்சுற்றியிருப்பது போலப் பாசம்

ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. முப்பொருட் சம்பந்தங்களைக் கொடிமரம் நன்கு காட்டுகின்றது.

## 23 கைலாசம்.

இருதயகமலம் இரவிவிம்பம் முதலிய எவ்விடங்களிலே சிவபெருமான் உபாசிக்கப்படினும், அவ்வவ்விடமனைத்தும் அவருக்குச் சோதிமய பரமாகாசமாகிய பரசிவலோகமெனப்படுங் கைலாசமாகும். (கைலாசம் நிரதிசய ஆனந்தத்துக்கு உறையுள்.)

## 24 தசசம்ஸ்காரம்

புதல்வனுடைய (சீடனுடைய) ஆவியை வாங்கி மூலாதார அருட்சத்தி தேகத்திலே பொருந்த அமைத்தல் இருதுசங்கம்; மலத்தினின்று பிரிந்து சிவனுக்குப் புதல்வனாதல் கருப்பாதானம்; திருவருட்குணங்கள் விளங்கப்பெறுதல் பும்ஸவனம்; அருவமாய மாயையை ஆன்மா அறியும் விவேகம் சீமந்தோன்னயனம்; சிவ முதற்பொருளையெல்லாம் மருவி உட்கோடல் சனனம்; மும்மலமகன்று தன்னுள்ளே சிவத்துவந்தோன்றல் நாமகரணம்; பேரானந்தம் புசித்துப் பிரியாதிருத்தல் அன்னப்பிராசனம்; சிவமே மேலாய்த்தோன்றுதல் சௌளம்; அளவிலாப் பாசசாலங்களை அகற்றும் மெய்ஞ்ஞான நூலோடு பழகுதல் உபநயனம்; இந்திரியவிஷய அறிவைத் தூர்த்தல் விரதாதேசமாகும்.

திருச்சிற்றம்பலம்

T
1140

1140

ஔவையார் அருளிச்செய்த

# நாயகரகவல்.

GOVERNMENT ... LIBRARY
13 MAY 1940
TRIPLICANE P.O. MADRAS



என். கணபதி முதலியார் அவர்களது,
சென்னை ஸ்ரீ கணேஸானந்தம் பிரஸ் பதிப்பு.

இதன் விலை] 1939 [பை 6

உ

ஔவையார் அருளிச்செய்த

# விநாயகர் அகவல்!

## விநாயக சதுர்த்தி விரத வரலாறு

பிரம்மதேவன் கொட்டாவியில் உதித்த சிந்தூரனைச்சங்காரஞ்செய்ய கஜானனமூர்த்தியாய் அவதரித்த தினம் ஆவணிமீ பூர்வபக்ஷசதுர்த்தி இந்தநாளில் சிவபிரானும் உமாதேவியாரும் அக்கடவுளைப்பூசித்ததினால் இவ்வுலகில் நம்முடைய மகஸ்தர்கள் யாவரும் வருடந்தோறும் ஆவணிமீ பூர்வபக்ஷ சதுர்த்தியில் விநயக விரதம் அநுஷ்டிக்கவேண்டும்.

## விநாயகர் அகவல் வரலாறு

சுந்தரமூர்த்தி நாயனருடனே கயிலாயத்துக்குப் பரமசிவனுடைய சந்நிதானத்தில் ஆதியுலா அரங்கேற்ற எழுந்தருளும் சேரமான் பெருமானயனர் ஔவையாரை அழையாமல் வந்துவிட்டோமே என்று நினைத்தார். அது இச் 'சீதக்களப' என்கிற அகவலைக்கொண்டு விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாருக்குத் தெரிந்து தானும் அவர்களுடனே கயிலாயத்துக்குப் போக வேண்டுமென்கிற விருப்பங்கொண்டு துரிதமாய் பூசைசெய்தார். விநாயகர் "ஔவையே! நீகிரமப்படி பூசை செய், அவர்களுக்கு முன்னதாகவே நீ போய் கயிலாயஞ் சேரும்படி செய்வோம்" என, அவ்வாறே தாம் பூசை செய்து முடித்தனர். உடனே விநாயகக்கடவுள் தனது துதிக்கையாலெடுத்துவிடக் கயிலாயத் தடைந்தனர்.

பின்பு வந்து சேர்ந்த சேரமான் பெருமாணுயனும் ஒளவையாரைக்கண்டு அதிசயப்பட்டார். அச்சமயத்தில் ஒளவையார் சொன்ன,

## கட்டளைக் கலித்துறை.

மதுர மொழிநல் லுமையாட் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினைய வல்லார்க் கரிதோ முகில்போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையுந் தேரும் அதன் பின்வருங்
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.

## விநாயகர் பூஜாவிதி

(சுலோகம்) சுக்லாம் பரதரம் விஷ்ணும், ஸஸிவர்ணம் சதுர்ப்புஜம், ப்ரஸந்ந வதனம் த்யாயேத், ஸர்வ விக்நோப ஸாந்தயே.

### சோடச நாமங்கள்.

| | |
|---|---|
| ஓம் சுமுகாய நம: | ஓம் தூமகேதுவே நம: |
| ஓம் ஏகதந்தாய நம: | ஓம் கணாத்யக்ஷா நம: |
| ஓம் கபிலாய நம: | ஓம் பாலசந்த்ராய நம: |
| ஓம் கஜகர்ணகாய நம: | ஓம் வக்ரதுண்டாய நம: |
| ஓம் லம்போதராய நம: | ஓம் சூர்ப்பகர்ணாய நம: |
| ஓம் விகடாய நம: | ஓம் ஹேரம்பாய நம: |
| ஓம் விக்நராஜய நம: | ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம: |
| ஓம் விநாயகாய நம: | ஓம் மஹாகணாதிபதியே நம: |

நாநாவித பத்ராணி புஷ்பாணி ஸ்மர்ப்பயாமி
தூபம் ஆக்கிராபயாமி, தீபம் தர்ஸயாமி

## சுலோகம்.

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விலம்பித சூத்திர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ந விநாயக பாத நமஸ்தே.

## அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன
இப்பொழுதென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி

மாயாப் புறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானம் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையி னினிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை

## விநாயகர் அகவல்

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயிற் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று.

---

உ

சிவமயம்

# வேழமுகம்

---

குறள்-காப்பு.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும் (1)
வெற்றி முகத்து வேலவனைத் தொழப்
புத்தி மிகுத்து வரும். (2)
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளி யோடுந் தொடர்ந்த வினைகளே. (3)
அப்ப முப்பழம் அமுதுசெய் தருளிய
தொப்பை யப்பனைத் தொழவினை யறுமே. (4)

# பிள்ளையார் சிந்தனை

| | |
|---|---|
| சிந்தித் தவர்க்கருள் கணபதி | ஜெயஜெய |
| சீரிய ஆனைக் கன்றே | ஜெயஜெய |
| அன்புடை அமரரைக் காப்பாய் | ஜெயஜெய |
| ஆவித் துணையே கணபதி | ஜெயஜெய |
| இண்டைச் சடைமுடி இறைவா | ஜெயஜெய |
| ஈசன் தந்தருள் மகனே | ஜெயஜெய |
| உன்னிய கருமம் முடிப்பாய் | ஜெயஜெய |
| ஊர்ந வசந்தி உகந்தாய் | ஜெயஜெய |
| எம்பெரு மானே இறைவா | ஜெயஜெய |
| ஏழுல குந்தொழநின்றாய் | ஜெயஜெய |
| ஐயா கணபதி நம்பியே | ஜெயஜெய |
| ஒற்றை மருப்புடை வித்தகா | ஜெயஜெய |
| ஓங்கிய ஆனைக் கன்றே | ஜெயஜெய |
| ஔவிய மில்லா அருளே | ஜெயஜெய |
| அஃகர வஸ்து ஆனவா | ஜெயஜெய |
| கணபதி என்வினை களைவாய் | ஜெயஜெய |
| ஙப்போர் மழுவொன்றேந்தியே | ஜெயஜெய |
| சங்கரன் மகனே சதுரா | ஜெயஜெய |
| ஞயநம் பிணர்பா லாடிய | ஜெயஜெய |
| இடம்படு விக்கின விநாயகா | ஜெயஜெய |
| இணங்கிய பிள்ளைகள் தலைவா | ஜெயஜெய |
| தத்துவ மறைதெரி வித்தகா | ஜெயஜெய |
| நன்னெறி விக்கின விநாயகா | ஜெயஜெய |
| பள்ளியி லுறைதரும் பிள்ளாய் | ஜெயஜெய |

மன்று ளாடும் மணியே ஜெயஜெய
இயங்கியே ஞானக் குன்றே ஜெயஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெயஜெய
இலவக் கொம்பன் றேந்தியே ஜெயஜெய
வஞ்சனை பலவுந் தீர்ப்பாய் ஜெயஜெய
அழகின ஆனைக் கன்றே ஜெயஜெய
இளமத யானை முகத்தாய் ஜெயஜெய
இரகுபதி விக்கின விநாயகா ஜெயஜெய

அனந்தலோ டாதியி லடிதொழ வருளே.
பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

---

## சரஸ்வதி சிந்தனை.

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்து வாழ்வே
வித்தக பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளு கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுல குந்தொழு தேவி
செப்புக வித்தன முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணுய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம்பூ மேனி நிறத்தாளே

தக்கோலந்தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறிபுத்தி பண்ணுவிப்பாய்
ஆக்கா எம்பெரு மாட்டி
அழகிய பூஅணை மீதாய்
நோக்கா யென்மிடி தீர
நொடிக்கும் பிரமனைத்தி ளேக்காயே
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப்.
பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக் கரசே நமோஸ்து
கணக்கறிதேவி நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூக்கும ரூபி நமோஸ்து

சரஸ்வதி சிந்தனை முற்றிற்று.

## பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை.

எள்ளுபொரித்த பொரியும்
இடித் தவல்தனிற் கலந்து
வள்ளிக் கிழங்கைத் திருத்தி

வாழைப் பழத்தை யுரித்து
உள்ளிய பாகு திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத்திருமால் மருகா
கணபதி சப்பாணிகொட்டாயே
ஆறுதேங்காயவள் தூணி
அதற்குத்தகுந்த எள்ளுருண்டை
நூறுகுடலை மாம்பழம்
நொடிக்குமளவி லமுதுசெய்
வல்ல பிள்ளாய்
ஆடாய் பாடாய் சங்கீதம்
அடியேன் காண நின்றாடாயே
சண்டப் பெருச்சாளி மீதே
சடுகுடு என்ன உலாவி
இண்டை இளம்பிறை சாய
இணங்கிய கொம்போரிரண்டுதே
அண்டத்தமரர் துதிக்க
அடைக்கலங் காத்த பிரானே
குண்டைக் கணபதி நம்பி
குடங்கையாற் சப்பாணி கொட்டாயே
பொழுது விடிந்தது பொழுது
போய்திருமலை ஏறவேண்டும்
ஏறிமலர்ந்த பூக்கொய்யவேண்டும்
கொய்து திருமுடி சாத்த வேண்டும்

சாத்தியே கைகட்டி நிற்கவேண்டும்
நின்று திருவிளக் கேற்ற வேண்டும்
ஏற்றி அரகரா என்ன வேண்டும்
ஐயா கணபதி நம்பி
ஆயிர நாம முடையாய்
பொய்யில்லா மெய்யை யுரைப்பாய
போன தெல்லாந் தருவாய்
வெள்ளித்தாலம் பூசிவைத்து
வேண்டும்படியே யிட்டுண்டு
பள்ளிக் கேற்க நடவாய்
பாக்கியஞ்செய்த பிள்ளாய்
பிள்ளாய் பிள்ளாய் பேருடையாய்
பிரம மென்னும் பேருடையாய்
பிள்ளைகள் தங்கள் பிரானாரே
இருந்தீரே பிரானாரே
எங்கள் மனது கலங்காதே
பள்ளிற்தடுக்குங் கையேடும்
படிக்குஞ்சுவடியும் பரிந்தெடுத்துத்
துள்ளித்திரியுங் கால்கள் தன்னைத்
சுகமே நிறுத்தும் பிரானாரே
ஓடாதே ஒளியாதே
இட்டதே சோறும் பெற்றதே கறியும்
உண்டு தூங்கிப் பூசிமுடித்து
வெள்ளி முளைக்க பள்ளிக்கு வாரும்.

## உலகநாதர் பண்டிதர் இயற்றிய உலகநீதி

—:O:—

உலகநீதி புராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகன் காப்பு.

ஓதாமல் ஒருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்
போகாதே விடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டும் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாதாடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. (1)

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. (2)

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளு மறக்க வேண்டாம்
சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்

த்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்
வனந்தேடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (3)

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவறை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா வூரில்குடி யிருக்க வேண்டாம்
மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (4)

வாழாமற் பெண்ணைவைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றுஞ் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாருங் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (5)

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தை தன்னை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம்

வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்
சேர்த்தபுக ழானதொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே. (6)
கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்களத்தில் போக வேண்டாம்
பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே. (7)
சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரியவேண்டாம்
வாதாடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே. (8)
மண்ணினின்று பெண்ணோரஞ் சொல்ல வேண்டாம்
மனசஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்

ணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
மண்ணளந்தார் மருமகனார் மைந்த னெங்கோன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே. (9)

புறம் பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளு மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம்பேசி வாழ்கின்ற வள்ளி பங்கம
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே. (10)

அஞ்சுபேர் கூலியைக் கைகொள்ள வேண்டாம்
அதுவேது தம்பிநான்சொல்லக் கேளாய்
தஞ்சமுட நாவிதர் வண்ணான் கூலி
சகலகலை யோதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மறுத்துவிச்சி கூலி
மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொலுட னிவர்கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ எமன் தானே. (11)

கூறாக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்

தூருக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
தூர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்.
மாறான குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.
ஆதரித்துப் பலவகையாற் பொருளுந்தேடி
அருந்தமிழா லறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தா லுலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரு
கருத்துடனே நாள்தோறுங் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்துபுகழுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வர் தாமே.

உலகநீதி முற்றிற்று.

வெளிவந்துவிட்டது! ஓம் வெளிவந்துவிட்டது!!
சகல தேவதை வசிய மென்னும்
மலையாள மாந்திரீக ஹரிச்சுவடி.
40-சக்கரங்களுடன் 4-பாகங்கள் அடங்கியது.
தபால் சார்ஜ் உள்பட 5-அணு ஸ்டாம்பு அனுப்பினால் நாடிவரும்

ஸ்ரீ கணேஸானந்தம் பிரஸ், சென்னை—1939.

உ

செந்திலாண்டவன் துணை

# ஆ[illegible]சூடத் திறவுகோல்

௰-வது ஆண்டு நினைவு வெளியீடு

**20—3—1950**

★

ஸ்ரீ காசி மடம்

1950

உ

செந்திலாண்டவன் துணை

குரு முனி

அருளிச்செய்த

# ஆத்திசூடித் திறவுகோல்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம்

20-வது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களுடைய திருவுள்ளப்படி

வெளியிடப்பெற்றது.

பதிப்பாசிரியர் :

**வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்**

[விரோதி ஆண்டு பங்குனித் திங்கள்]

உரிமைப்பதிவு] ★ [மார்ச்சு 1950

# முன்னுரை

'ஆத்திசூடித் திறவுகோல்' என்னும் இந்நூல் சென்னை அரசாங்கப் புத்தக நிலையத்திலுள்ள ஏட்டுப் பிரதியிலிருந்து எடுக்கப்பட்டு, அந்நிலையத்திலிருந்து வெளிவரும் வெளியீட்டில் அச்சிடப்பட்டுள்ளது. (Madras Oriental Manuscripts Library Bulletin vol. II. No. 1. Pages 37-40) இது ஷை வெளியீட்டின் பதிப்பாளர் ஸ்ரீ T. சந்திரசேகரன் M. A., L. T., அவர்களின் அநுமதியுடன், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் விருப்பத்திற்கிணங்க, ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின் 6-வது ஆண்டு நினைவு வெளியீடாகத் தனி நூலாய் வெளிவருகிறது.

அரசாங்க வெளியீட்டில், சில செய்யுட்களின் யாப்பமைதி செம்மையின்றி இருந்ததால், அவ்விடங்கள் சீரமைதி நோக்கிச் செப்பஞ் செய்யப் பெற்றுள்ளன. ஆயினும், ஆராய்வார்க்கு உறுதுணையாகுமாறு ஷை வெளியீட்டில் உள்ளவாறு மூல பாடங்கள் கீழ்க் குறிப்பாகக் கொடுக்கப்பெற்றுள்

ளன. சில அருஞ் சொற்களுக்குப் பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூல் நீதிவாக்கியங்களின் கருத்தை விளக்குவதோடு மந்திரம், மருத்துவம், யோகம் முதலிய நுட்பமான கருத்துக்களை மறைபொருளாகவும் விளக்குகின்றது. ஆராய்கின்ற அறிஞர்களுக்கு இந் நுட்பங்கள் புலனாகலாம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சைவசமயம், கல்வி இவைகளை மட்டும் வளர்க்க இதுகாறும் பதினைந்து இலட்சம் ரூபாய்களுக்குமேல் செலவு செய்துள்ளார்கள். பிற அறங்கள் அளவிற்கு அடங்கா. இவர்கள், இச் சிறு நூலின் பெருநுட்பத்தை யோர்ந்து ஆராயும் பேரறிஞர்களுக்குப் பெருநன்மை பயக்கும்படி இதனை வெளியிட்டுதவ மனமுவந்த கருணைக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டும் கடப்பாடுடையதாகும்.

இந்நூலைப் பதிப்பிக்கும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு அடியேனின் வணக்கம் என்றும் உரியதாகும்.

வரகநேரி
திருச்சிராப்பள்ளி
20—3—'50

இங்ஙனம்,
தி. பட்டுச்சாமி ஓதுவார்

உ

செந்திலாண்டவன் துணை

# ஆத்திசூடித் திறவுகோல்

ₒₒₒOO★OOₒₒₒ

## அறஞ்செய விரும்பு

### இதன் உட்பொருள்

அரனென்ற பொருளல்லால் உலகின் கண்ணே
அண்[1]டருக்குத் தான்முனிவர்[2] காணார் சூக்மம்;
சரமென்றும் பெயர்பெற்று உலகில் தானும்
தனக்குள்ளே தானாகி அண்ட மாகிப்
பரமென்ற கீர்த்தியுள்ள சித்தர் யோகி
பரிவாக உச்சரித்தும்[3] நமனை வெல்வார்;
குருவென்றும் சீடரென்றும் கற்ப மென்றும்
குவலயத்தில் அறஞ்செய்ய விரும்பு மாச்சே.

---

(மூலப்பிரதி பாடம்.) [1] உலகிலண். [2] முனிவருமே. [3] யஷ்டரித்தும்.

அண்டர் - தேவர். சரம் - சுவாசநடை. கற்பம் - மந்திர சாத்திரம்; சித்தர்கள் மருந்து.

## ஆறுவது சினம்

### இதன் உட்பொருள்

ஆருவது ஆறுதலம்[1] நிலையைக் கண்டு
அனுதினமும் இருபத்தெட்(டு) அட்ச ரத்தால்[2]
பேருபெற ஓம்நமசி வாயத் திற்குப்
பிறவிதனை மாற்றிவிடப் பொருள்மை பெற்றுக்
கார்சொரியுஞ் சரமாரி பழக்கஞ் செய்து
காலனைக்கா லால்உதைத்துக் கருணை கொண்டு
சீர்பெறவே[3] சின்மயத்தைத் தியானஞ் செய்து
தீர்வது[4] தான் ஆறுவது[5] சினந்தான் ஆச்சே.[6] 2

---

(மூ. பா.) [1] ஆருதலம். [2] அக்ஷரத்தினலே. [3] சீருடனே. [4] தீருவது. [5] ஆருவது. [6] சினம் நமக்குளாச்சே.

ஆருவது - பொருந்துவது ஆறுதலம் - மூலாதாரம் முதலியன. ஓம் நமசிவ(ா)ய - நாலபஞ்சாக்கரம். சின்மயம் - ஞானமயமான கடவுள்.

## இயல்வது கரவேல்

### இதன் உட்பொருள்

தவிராத வித்தையினை [1] எடுத்து விட்டால் [2]
தானேஉன் தலையிலிடி [3] விழுமே பாரு;
புவியிலின்ன [4] தென்றறிந்து அறமே [5] செய்தால்
புண்ணியனே! உனக்குவசம் புனித வாழ்வு;
கயமானம் இலகுகின்ற [6] கருத்துந் தோன்றும்; [7]
காணாத சிலம்பொலியின் காட்சி காணும்;
சயம்பு [8] லிங்க மாகவேநீ ஆவாய் அல்லோ?
சடுதியினில் இயல்வதைநீ [9] கரந்திடாதே. [10] 3

---

(மூ. பா.) [1] தாராத வித்தையை. [2] விட்டாலிடி. [3] தலையில். [4] புவிதனிலேயின்ன. [5] அறம். [6] இலகும். [7] தோணும். [8] சுயம்பு. [9] சடுதியாய் நீ இயல்வதை. [10] மறந்திடாதே.

கயமானம் - மிகமேன்மை. சயம்பு - சுயம்பு.

## ஈவது விலக்கேல்

### இதன் உட்பொருள்

இவறதுதான்[1] நாதவிந்து பூதியத்தில்
　இனிதாக்கும் நினைந்நினைமும் அருச்சித் தாக்கால்
கவன[2]மதில் தூக்கிவிடும் கிருபை யோடு
　கம்பீரம் பெற்றுச்சிவ யோகி யாவாய்;
மவுன[3]மது கைகூடும்; யுகாந்த காலம்
　வச்சிரம்போல் தேகமது வாசி நிற்கும்;
தவனமாய்[4] ஈவதுதான் விலக்கி விட்டால்
　சண்டாள! நற்கதியைச் சாருவாயோ? ௪

---

(மூ. பா.) [1] ஈவதுதான். [2] கெவன. [3] மௌன. [4] கவனமாய்.

இவறல் - ஆசைப்பெருக்கம். பூதியம் - உடல்; பூமியுமாம். வாசி - சுவாசநிலை. தவனம் - ஆசை. சண்டாளன் - கருமத்தை விடுத்தவன்.

## உடையது விளம்பேல்

### இதன் உட்பொருள்

உடையசத் துக்களின்சங் கதியைக் கல்லான்[1]
ஒருத்தனுக்கு நீயுரைத்தால் மூழ்கிப் போவாய்;
உடையவன் தான் மூதண்டங் கண்டு கொள்வான்
ஒருவனுமே தானந்தித் தாயைக் கண்டு
படைமுகத்தில் வில்லெடுப்பான் சரந்[2]தொடுத்துப்
பாழான ஒன்பதுபத்(து) ஆறு பேரை
விடைவிடென[3] நடுக்கமது செய்து வைத்து
விருந்தாக உடையவனே விளம்பான் ஐயா![4] 5

---

(மூ. பா.) [1] அண்ட சத்துக்களின் சங்கதிகளைக் கல்லாதான். [2] சுரம். [3] விடவிடென. [4] விளம்பானய்யா.

?. மூதண்டம் . பழைய லோகம். சரம் - அம்பு. ஒன்பது பத்து ஆறு - 96 தத்துவங்கள். விடை - உத்தரம்.

## ஊக்கமது கைவிடேல்

### இதன் உட்பொருள்

ஊக்கமது அண்டவிந்தை என ஆறுந்தான்
  உற்பனமாய் இருதயத்தில் இருத்திக் கொண்டு
ஆக்கையதை அழிக்காமல் நடேசர் பாதம்
  அனுதினமும் அர்ச்சித்து அருளைப் பெற்று
வாக்குமனம் ஒன்றாகச் சமாதி பூண்டு
  மயிர்ப்பாலம்[1] மீதினிலே மனக்கண் சாத்தித்
தேக்கில்லா அமுதமதைக் கொண்டு நித்தம்
  சின்மயத்தின் ஊக்கமதைக் கைவிடாதே. 6

---

(மூ. பா.) [1] மயிற்பால.

விந்தை - ஆச்சரியம். ஆறு - ஆறுதாரம். உற்பனம் - தோற்றம். ஆக்கை - உடல். சமாதி - அட்டயோகத்தொன்று. பாலம் - நெற்றி நடு. ஊக்கம் மனவெழுச்சி. கை : உபசர்க்கம்.

## எண்ணெழுத் திகழேல்

### இதன் உட்பொருள்

எண்ணெழுத்தைக் கைப்பற்றிக் கொண்டு நீதான்
இருந்துவிளை யாடிடுவாய் அட்ட சித்தும்;
கண்ணெழுத்தால் கருவிகளைச் சுட்ட றுத்துக்
கருவாயுள்ள தண்டியின்மேல் ஏறி ஆடி
வண்ணனைத்தான் மாடாக்கிச் சமைத்து வுண்டு
மார்க்கமதைக் கருத்தாலே அறிந்து கொண்டு
திண்ணமுள்ள எண்ணெழுத்தை மாய்ப்பா யானல்
தெறித்து[1]விடும் உன்சிரசு சித்த மாமே. 7

---

(மூ. பா.) [1] தெரித்து.

**எண் - தருக்கநூல். எழுத்து - இலக்கணநூல். அட்டசித்து - அட்டசித்தி; அவை அணிமா, மகிமா முதலியன. தெறித்தல் - சிதறுதல். கண் எழுத்து (மூக்கு நுனியை நோக்கிய) கண் பார்வை.**

## ஏற்பது இகழ்ச்சி

### இதன் உட்பொருள்

ஏர்ப்பதுதான் ஆரென்றால் ஆனைக் கல்லை
இல்லறத்தை வைத்தவன்தான்[1] பூசி யாத
கார்த்திகையாம் அருச்சுனன்தான் கண்டெடுத்த
கருத்ததனை[2] அறியாத கசட்டு மாக்கள்
பார்த்திருந்தும் பெண்டுபிள்ளை பண்ணை[6]த் தேடிப்
பாழான நரகத்தில் அழுந்தி நிற்கும்[3]
ஈர்த்திடுநற்[4] பொருளறிந்து தின்பா றானால்
எக்காலும் ஏற்பதில்லை[5] இகழ்ச்சி யாமே. 8

---

(மூ. பா.) [1] வைத்தவன். [2] கருத்தனை. [3] நிற்கு. [4] போற்றியதோர். [5] மாய்ப்பதில்லை. [3] பெண்ணை.

ஏர்ப்பது - ஏற்பது; எதுகைநோக்கித் திரிந்தது. கசட்டு மாக்கள் - கீழ்மக்கள். பெண்டு-பெண்மகள். பண்ணை - மனைவி; நிலமுமாம்.

# ஐயமிட்டுண்

## இதன் உட்பொருள்

ஐயமிட்டான்[1] சிறுத்தொண்டன் பிண்டத் தாலே
ஆத்தாளுங் கருணைவைத்துக் கடாட்சித் தாள்
பையரவ மே[2]கொண்டான் கார மான [தான்
பாவையைத்தான் சிரசில்வைத்தான் பரிசில்தே
மெய்யதனை நீக்கிவிட்டான் மகாரத் தாலே [கம்
மேதினியில் அவனுமொரு சித்த னானன்;
வையகத்து[3] மயக்கமதை நீக்கி விட்டு
மருவிஐய மிட்டுண்ண மகிழுந் தானே. 9

---

(மூ. பா.) [1]ஐய்யமிட்டான். [2]பைய்யரவமே. [3]வைய்யகத்து.

பிண்டம் - மாமிசம்; பிள்ளைக்கறி. ஆத்தாள் - உமை. காரமானபாவை - கங்கை. வய்யம் - வையம்; உலகம்.

# ஒப்புரவொழுகு

## இதன் உட்பொருள்

ஒப்புரவாய்ப் பூதியத்தைச் சீர்ப்ப டுத்தி[1]
உயர்ந்திருக்கும் தாமிரத்தை[2]த் தகடு தட்டிக்
கப்பில்லாப் பூபதியை மேலே யேற்றிக்
கருவான தேய்வினிலே கதிக்க வாட்டித்
தப்பில்லா எருவாலே புடத்தைப் போட்டுத்
தருவான இருதுருத்தி கொண்டு ஊதி
அப்பனே! உருக்கியபின் ஆஊ நாடி
அழகாக ஒப்புரவாய் அழகு செய்யே.

---

(மூ. பா.) [1]சீர்படுத்தி. [2]தாம்பரத்தை.

ஒப்புரவு - முறைமை. பூபதி - ஓர் குளிகை. தேய்வு - தேயு - அக்கினி. எரு - எருமுட்டை. இருதுருத்தி - கடுநாடி; சுழிமுனை: அது மூலாதாரத்திலிருந்து உச்சித் துவாரம் வரை நிற்கும் நாடி.

# ஓதுவ தொழியேல்

## இதன் உட்பொருள்

ஓதுவதே[1] அண்டபிண்டம் நந்தி பிண்டம்
ஒருக்காலும் மறந்துவிட்டால் ஆண்டு பாழாம்;
சேதமது செய்யாமல் செய்தா யானால்
திருமகளே! ஆண்டுக்கு முன்னா றாகும்;
பாதமதை இன்னதென்று பூசை செய்து
பண்பான அரியென்று[2] பகர்வா யானால்
காதமது போய்விடுமே[3] ஓதுவதி னின்று[4]
கலங்காதே; தோளிலேதான் கண்டு கொள்ளே. 11

---

(மூ. பா.) [1] ஓதுவது. [2] வரியென்று. [3] போய் விடும். [4] ஓதுவதில்.

ஆண்டு - அங்கு. சேதம் - அழிவு. அரி - ஹரி. காதம் - காவதம்; அது நாலு கூப்பீடுகொண்ட தூரம்.

## ஔவியம் பேசேல்

### இதன் உட்பொருள்

அவ்வியமது[1] இருந்துநீ பேசுவா யாகில்
ஐந்திருந்தும் காலாகி மடித்துப் போவாய் ;
அவ்வியமதைக் கைவிட்டு[2] ஆதி தன்னை
அஞ்சலித்து அடிதொழுது அமர்ந்து நின்றால்
அவ்வியத்தால்[3] கூக்குரல்கள் நிரம்ப[4] உண்டு ;
ஆறிரண்டு பன்னிரண்டில்[5] அடங்குஞ் சோதி
அவ்வியத்தை[6] இன்னதென அறிந்தா[7] யானால்
அண்டரண்டம் உன்வசமே ஆகுந் தானே. 12

---

(மூ. பா.) [1] ஔவியமது. [2] ஔவியமதை விட்டுநீ. [3] ஔவியத்தால். [4] ரொம்ப. [5] பன்னிரெண்டில். [6] ஔவியத்தை. [7] யின்னதென்றறிந்தா.

அவ்வியம் - ஔவியம் - பொறாமை. ஆதி - இறைவன் ; சத்தியுமாம். பன்னிரண்டு - துவாத சாந்தம்.

## அஃகஞ் சுருக்கேல்

### இதன் உட்பொருள்

சுருக்குவது மயிர்ப்பால மீதில் தானும்
தூண்டாத தீபம்போல் இருக்க வேணும்;
பருகுங்கால்[1] தெரியுமல்லோ? காயின் போகம்
பலிதமாக இல்லையென அறிந்து[2] கொள்ளு;
பெருக்கமுடன்[3] போசனமும் நீரும் உண்டால்
பேதைகளே! மனிதருக்குச் சாவு முண்டோ?
உருக்கலந்த போதேதான் எல்லா மாச்சு
ஊஅஃகஞ்[4] சுருக்கமதை உன்னிப் பாரே. 13

ஆத்திசூடித் திறவுகோல்
முற்றிற்று.

---

(மூ. பா.) [1] பழகச்சே. [2] பலிதமா மில்லையென் றறிந்து. [3] பெருக்கவே. [4] அக்கம்.

சுருக்குவது - (மனத்தை) அடக்குவது அஃகம் தானியம். உன்னி - நினைத்து.

உ

செந்திலாண்டவன் துணை

## கலைமகள்

"தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே."

— குமரகுருபர சுவாமி

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.